2019 - இதழ் 04

இலவசம்

## சித்திரை - 2019

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE

APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம் **2019 - இதழ் 04**

## இயேசு சொன்னார்:

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

# கிறேஸ் (ற்)ரபனக்கல்

# வெளியீடு

LOCAL CHURCH CONTACT INFORMATION

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2019 - இதழ் 04

## 4 உங்களுகுச் சமாதானம்

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் என்று கூறிய தேவ குமாரன் இயேசு பரலோக சமாதானத்தை, நிலையான சமாதானத்தை தந்தருளியுள்ளார்.

## 6 தேவனுடைய ஆளுகை

உலக தோற்றத்திற்கு முன் அவர் முன்குறித்த கால அட்டவணையின்படி, நாங்கள் தற்காலத்திலே உருவாக்கப்பட்டுள்ளோம். குறிக்கப்பட்ட ஆண்டுகள் நாங்கள் இந்த பூமியிலே குடியிருக்கும்படி அனுக்கிரகம் பெற்றிருக்கின்றோம்.

## 11 பிரசங்கக் குறிப்புகள்

எங்கள் வாழ்க்கையானது தேவனை மகிமைப்படுத்த வேண்டும். என்னுடைய வாழ்க்கையிலே தேவன் மகிமைப்படும்படி நான் செய்கின்ற ஒவ்வொரு கிரியையும் அவருக்கு ஆராதனையாக இருக்கின்றது.

## 13 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


கிரேஸ் (ற்)ரபனக்கல்

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி

13ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... சித்திரை 3, 5, 13, 16, 18, 19, 22, 24 , 27

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... சித்திரை 4, 10 , 13, 18, 24, 26, 27

**நீங்கள் ஒரு போதும் மறக்கப்படுவதில்லை**
... சித்திரை 15, 23, 27

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... சித்திரை 5, 21, 27

**பாவங்களிலிருந்து மீட்படையும் ஒரே வழி**
... சித்திரை 8, 25

**தேவனுடைய கட்டளைகளும் நியமங்களும்**
... சித்திரை 6, 10, 14, 16 , 17, 19, 29 , 30

**கர்த்தர் ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி**
... சித்திரை 2, 10, 24

**தேவனுக்கு பிரியமான வாழ்க்கை**
... சித்திரை 1, 4, 9, 12 , 13, 19, 20, 21, 23, 27, 29

**பொறுமை, கீழ்ப்படிவு, தேவ பக்தி, தேவ பயம்**
... சித்திரை 3, 11, 12, 14, 16, 17, 20 , 30

**தேவனுடைய சிட்சை, சபை கூடி வருதல்**
... சித்திரை 9, 28

**மனக் கசப்பான, எரிச்சலான வேளைகளில்**
... சித்திரை 13, 14, 23, 24, 30

**மேன்மையான அழைப்பை பெற்றவர்கள்**
... சித்திரை 1, 4, 6, 7, 17 , 20, 21 , 22, 23, 27, 30

**அடிமைத்தனக் கட்டுகளிலிருந்து விடுதலை**
... சித்திரை 25

**தேவனுடைய நித்தியமான ஆசீர்வாதங்கள்**
... சித்திரை 7, 17, 18, 21, 27

gtchurch.ca

# உங்களுக்குச் சமாதானம்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

அன்பானது மனதுருக்கத்தை உண்டுபண்ணுகின்றது. அன்புள்ள தேவன் மனதுருகி, மனிதர்களுக்கு நன்மைகள் செய்கின்றவர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவை சுமந்து சென்றபோது பலர் கண்ணீர்விட்டு அழுதார்கள். ஆம் அவர்கள், அவர் மீது வைத்த அன்பினால் மனதுருகினார்கள். மனவேதனை அடைந்தார்கள். கர்த்தரோ அவர்களை நோக்கி எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்று கூறினார்.

இயேசு கிறிஸ்துவின் அன்பானது கல்லான இருதயத்தையும் கரையச்செய்கிறது. மன மாறுதலை கொடுக்கின்றது. இருளான இருதயத்தில் வெளிச்சத்தைக் கொடுத்து, தேவனை அறிகின்ற அறிவில் நம்மை வளர்க்கின்றது. உடைந்து போன இருதயத்தைக் குணமாக்குகின்றது. நம்பிக்கையற்ற நம் இருதயத்தில் பெலத்தையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணுகின்றது.

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களும், அவரது சிலுவை மரணத்தைக் கண்டபோது கலங்கிப் போயினர். ஆயினும் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததைக் கண்ட பின்பு அவரது பாடுகளின் நிமித்தம் கலங்காமல், அவரால் உண்டான இரட்ச்சிப்பையும் பாவமன்னிப்பையும் தம் வாழ்வில் எப்போதும் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

இம்மாதத்தில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எருசலேமுக்கு கெம்பீரமாய் திரும்ப வந்ததையும், அவரது பாடுகளையும், மரணத்தையும், அவரது உயிர்த்தெழுதலையும் நாம் நினைவு கூர்ந்து கொண்டாடுகிறோம்.

**அவரது மரணத்தின் நிமித்தம் அழுகின்றவர்களாய் இல்லாது, தேவனின் அன்பை எமது வாழ்வில் கொண்டாடுவோமாக.**

பரிசுத்த பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் “இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடேழுந்திருப்பதற்குத் தகுதியாயிருக்கும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்” என்று கூறியுள்ளார்.

அவரது பாடுகளைக் குறித்து பரிசுத்த பேதுரு கூறும்போது “அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறு த்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்பவித்தார்” என்று கூறியுள்ளார். அதினாலே அவர் மரணித்தபோது மரணமானது அவரைக் கட்டிப்போட முடியவில்லை. அவர் உயிர்த்தெழுந்தார்.

பரிசுத்த பவுல் தாமும் இது போன்று ஒரு பாவமில்லாத மரணத்தை அடையவேண்டும் என்றும், தேவ இராஜ்ஜியத்தில் காணப்படத்தக்க தகு தியுள்ளவனாக உயிர்த்தெழ வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து தமது சீஷர்களுக்கு தரிசனமான போது உங்களுக்குச் சமாதானம் என்று வாழ்த்தினார். இந்த சமாதானமானது பிதாவாகிய தேவனோடு உண்டான உறவாயுள்ளது. அதாவது நாம் தேவ பிள்ளைகளாக மாறிய உறவாகும். இதே சமாதானத்தை இயேசு கிறிஸ்து உலகில் பிறந்தபோது, பூமியில் சமாதானம் உண்டாவதாக என்று சொல்லி தேவதூதர் பாடினார்கள்.

**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் என்று கூறிய தேவ குமாரன் இயேசு பரலோக சமாதானத்தை, நிலையான சமாதானத்தை தந்தருளியுள்ளார்.**

பிரியமான சகோதரனே சகோதரியே,

சங்கீத புத்தகத்திலே, ஆத்துமா கலங்குவதேன்? தேவனை நினைத்திடு வாய். அவரின் இரட்ச்சிப்பினால் தினமும் மகிழ்ந்திடுவாய் என்று கூறியுள்ளதை வாசிக்கின்றோம். தேவ சமாதானம் உங்களோடிருப்பதாக. சமாதானத்தின் தேவன் உங்களை வழி நடத்துவாராக.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**கிருபையின் கூடார அப்போஸ்தல சபை**

gtachurch.ca

# தேவனுடைய ஆளுகை

ஏரேமியா என்னும் தேவ ஊழியனுடைய நாட்களிலே, தேவனாலே தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் அக்கிரமங்கள் அதிகமாயிற்று. அவனவன் தன்தன் பொல்லாத வழியை தெரிந்து கொண்டு, தேவனுடைய அரவணைப்பின் அழைப்பையும், பின்பு எச்சரிப்பின் தொனியையும் அநேக வருடங்களாக அசட்டை செய்து, தங்கள் கிரியைகளின் பொல்லாப்பை விட்டுத் திரும்ப மனதில்லாதவர்களானார்கள்.

தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஊழியனாகிய ஏரேமியா வழியாக உரைத்து கூறியதாவது: நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாமற்போனபடியினால், இதோ, நான் வடக்கேயிருக்கிற சகல வம்சங்களையும், என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவையும் அழைத்தனுப்பி, அவர்களை இந்தத் தேசத்துக்கு விரோதமாகவும், இதின் குடிகளுக்கு விரோதமாகவும், சுற்றிலுமிருக்கிற இந்த எல்லா ஜாதிகளுக்கும் விரோதமாகவும் வரப்பண்ணி, அவைகளைச் சங்காரத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவைகளைப் பாழாகவும் இகழ்ச்சிக்குறியாகிய ஈசல்போடுதலாகவும், நித்திய வனாந்தரங்களாகவும் செய்வேன் என்றார். (ஏரேமியா 25:7, 27:6, 43:10, 29:18)

கர்த்தர் குறித்த நேரம் வந்தபோது, அவர் முன்னுரைத்த பிரகாரமாய், யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து, அதை முற்றிக்கை போட்டான். அப்பொழுது தேவன் தாமே தேசத்தை நேபுகாத்நேச்சாரின் கையில் ஒப்புக் கொடுத்தார். (தானியேல் 1:2)

தேவனுடைய அநாதி திட்டம் நிறைவேறும்படியாக, அவர்தாமே, இஸ்ரவேல் சந்ததியை தெரிந்து கொண்டார். அதனால், பூமியிலுள்ள மற்ற தேசங்களும், ஜனங்களும் தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கவில்லை என்பது பொருள் அல்ல. தம்முடைய சித்தத்தை நிறைவேற்றும்படிக்கு, தேவன்தாமே நேபுகாத்நேச்சார் என்னும் மனிதனை பலமுள்ள பாபிலோனின் ராஜாவாக உயர்த்தி, அந்த ராஜாவை எருசலேமை முற்றுகை போடும்படி அனுமதித்தார்.

பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தி, அதை நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார். (சங்கீதம் 24:1-2) அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர் ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர் (தானியேல் 2:21). மேலும் தம்முடைய மிகுந்த வல்லமையை பூமியிலுள்ளவர்கள் கண்டு கொள்ளும்படியாகவும் தம்முடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், பண்டைய எகிப்தின் ராஜாவாகிய பார்வோனை உயர்த்தினார். (ரோமர் 9:17, யாத் 9:16).

தேவனை அறியாத தேசங்களும், அதன் குடிகளும் பெருமையானவைகளைப் பேசலாம். இவர்கள் கிறிஸ்தவர்கள், நாங்கள் அப்படியல்ல என்று கூறி, தங்களுக்கென்று தேவர்களை உருவாக்கலாம். அல்லது

தேவன் என்று ஒருவர் இல்லை என்று அகங்காரம் கொள்ளலாம். யார் எதை எப்படிப் பேசினாலும், நாங்கள் காண்கின்ற படைப்புக்களும், நாங்கள் காணாதவைகளும் யாவும் தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றது. பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்று மனிதனுக்கு பெரிதான சுதந்திரத்தை அவனுக்கு கொடுத்தார். ஆனால் மனிதர்களில் பலர், தங்களுக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்து, தங்கள் மனமேட்டிமையினால், பொல்லாத வழிகளை தங்களுக்கென தெரிந்து கொள்கின்றார்கள். மிகுந்த இரக்கமுள்ள தேவனானவர், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, யாவர்மேலும் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேது 3:9). கருப்பொருளாவது, கால அட்டவணை தேவனு டைய கரத்திலே உண்டு. அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார் உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார் ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான். (பிரசங்கி 3:11)

உலக தோற்றத்திற்கு முன் அவர் முன்குறித்த கால அட்டவணையின்படி, நாங்கள் தற்காலத்திலே உருவாக்கப்பட்டுள்ளோம். குறிக்கப்பட்ட ஆண்டுகள் நாங்கள் இந்த பூமியிலே குடியிருக்கும்படி அனுக்கிரகம் பெற்றிருக்கின்றோம். அதேபோலவே, ஆதாம் ஏவாள் நாட்கள் தொடக்கம் மனிதர்கள் இந்த உலகத்திலே தோன்றி, மறைந்திருக்கின்றார்கள். பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் தம் வார்த்தைகளை அறிவித்தார். காலம் நிறைவேறிய போது, தம்முடைய வாக்கின்படி, தம்முடைய ஏக சுதனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, அவர் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார். மீட்பராகிய இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படியாக யோவான் (ஸ்நானன்) என்ற மனிதனை தேவன் அனுப்பினார். இயேசு தம்முடைய திருப்பணியை இந்த உலகத்திலே செய்யும்படியாக தமக்கென்று சீஷர்களை தெரிந்து கொண்டார். அவர்கள் மீட்பின் செய்தியை உலகத்திற்கு அறிவித்தார்கள். இப்படியாக, கர்த்தராகிய இயேசு இந்த உலகத்திற்கு வந்து, பரலோகம் சென்று 2000 வருடங்களுக்கு மேல் கடந்து சென்றிருக்கின்றது. தற்போதுள்ள காலகட்டத்திலே நாங்கள் தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படியாய் ஏற்படுத்தப்பட்டுள்ளோம். இது ஏதேட்சையான காரியம் அல்ல. இது பிதாவாகிய தேவனுடைய அநாதி தீர்மானம். அவருடைய கரத்தின் கருவிகளாக நாங்கள் இருக்கின்றோம். எனவே மேன்மை பாராட்டல் எங்களுக்குரியதல்ல.

தேவன், நேபுகாத்நேச்சார் என்னும் புறஜாதி மனிதனை உயர்த்திய போது, அவன் தன் பெலத்தையும், ராஜ்யத்தின் வல்லமைமையும் குறித்து மேன்மைபாராட்டி, தன்னைத் தான் உயர்த்தினான். இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான். (தானியேல் 4:30). உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை அவன் அறிந்துகொள்ளுமட்டும், மனிதர்கள் மத்தியிலிருந்து தள்ளப்பட்டு, மிருகத்தை போல, வெளியிலே இருந்தான். காலங்கள் கடந்து சென்ற பின், அவன் புத்தி அவனுக்குத் திரும்பி வந்தது. அப்பொழுது அவன் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து,

என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினான். அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ் யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும் என்றான். தேவன், ராஜ்ய த்தை மறுபடியும் அவனுக்கு கொடுத்து அவன் ஸ்தானத்தில் அவனை உயர்த்தினார்.

கிறிஸ்துவுக்கு பின், தேவனுடைய ஊழியங்களும் இவ்வண்ணமாக ஏற்ப டுத்தப்பட்டிருக்கின்றது. அவருடைய கால அட்டவணையின்படி நாங்கள் தற்போது நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் உண்டு. அவை எங்க ளால் உண்டானவைகள் அல்ல. தேவனுடைய தாசர்கள் முன்னோடிக ளாக தங்களுடைய ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடித்தார்கள். அதன் தொடர்ச்சியாக நாங்கள் தற்போது ஓடுகின்றோம். எனவே மேன்மைபா ராட்டல் எங்களுக்குரியதல்ல.

தேவ ஊழியராகிய பவுல் என்பவரின் நாட்களிலே, கொரிந்து பட்டண த்திலே இருந்த சபையிலே, சில குழப்பங்கள் ஏற்பட்டிருந்தது. ஒருவன் நான் பவுல் என்னும் ஊழியரின் கட்சி என்றும், வேறொருவன் நான் அப்பொல்லோ என்னும் ஊழியரின் கட்சி என்றும், இன்னுமொருவன் நான் பேதுரு என்னும் ஊழியரின் கட்சி என்றும் சொல்லிக் கொண்டார் கள். அதற்கு ஊழியராகிய பவுல் கூறியதாவது: பவுல் யார்? அப்பொ ல்லோ யார்? கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலு வையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற் றீர்கள்? நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளை யச்செய்தார் என்றார்.

இவ்வண்ணமாகவே, ஒரு காலகட்டத்திலே, இலங்கை தேசத்திலுள்ளவ ர்கள் தேவனை அறியாதவர்களாக இருந்தார்கள். தங்கள் உயிரை பண யம் வைத்து வந்த திருத் தொண்டர்கள், இயேசு கிறிஸ்துவின் மீட்பின் நற்செய்தியை அறிவித்தார்கள். தேவனுடைய வார்த்தையை விதைத் தார்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்களுக்கு பின்வந்த பலரும், பல கிராமங்களுக்கு சென்று, பல பாடுகள் மத்தியிலே, கிறிஸ்துவின் நற்செ ய்தியை அறிவிக்கின்றார்கள். அவர்களுடைய காலகட்டத்திலே, அவர் கள் பெரும் அறுவடையை காணவில்லை. அவர்கள் தேவ வார்த்தையை விதைக்க நியமிக்கப்பட்டவர்கள். அதன் பின்பு அறுவடைக்காக, வேறு ஊழியர்களை, வேறொரு கால கட்டத்திலே தேவன் நியமிக்கின்றார். அந்த ஊழியர், பெரும் அறுவடையை செய்கின்றார். அந்த ஊழியர் அறு வடையை செய்த பின்பு, இது என்னுடைய சபை, இது என்னுடைய ஊழியம், இது என்னுடைய பிரயாசம், நான் இதை செய்தேன் என்று கூறமுடியுமா? அல்லது, எங்களுடைய சபையைத் தான் தேவன் தெரிந் திருக்கின்றார். எங்களுடைய சபைதான் பெரியது என கூறமுடியுமா? அப் படி கூறமுடியாது. ஏனெனில், தேவனுடைய கால அட்டவணையின்படி, நாங்கள் அறுவடை செய்ய நியமிக்கப்பட்டிருந்தால், அது தேவனு டைய நியமனம். எல்லா மேன்மையும் கனமும் கர்த்தர் ஒருவருக்கே.

எங்கள் யாவருக்கும் பிரதான போதகராக இயேசு கிறிஸ்து இருக்கி ன்றார். அவருக்குள் பல ஊழியர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த உலகத்திலுள்ள ஜனங்கள் கோடிக் கணக்கானோர், அவர்கள் யாவரையும், இந்த உலகத்திலுள்ள ஒரு ஊழியரால், தேவனிடம்

வழிநடத்த முடியாது. ஆகவே, தேவ அட்டவணையின்படி காலத்திற்கு காலம் தேவன் தம்முடைய தாசர்களை அழைக்கின்றார். அவர்கள், இந்த உலகத்திலே, சிறு குழுக்களாக கூடி தேவனை ஆராதித்து வருகின்றார்கள். பிரதேச அடிப்படையில், நாட்டுக்கு நாடு, பட்டணத் திற்கு பட்டணம், சபைக்கு சபை என வெவ்வேறு இடங்களில் இருந்தா லும், நாங்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்க வேண்டும்.

தேவனுடைய ராஜ்யம் பிரிந்திருப்பதில்லை. தேவனுடைய பிள்ளைகளு க்கு மத்தியிலே பிரிவினை இருக்காது. கிறிஸ்துவின் சபையாகிய சரீரத் திலே, அவருடைய விலைமதிக்கமுடியாத இரத்தத்தினால் மீட்கப்பட்ட வர்கள் யாவரும், அவயவங்களாக இருக்கின்றோம். இன்னுமொரு இட த்திலே, இயேசு கிறிஸ்து திராட்சை செடியாக இருக்கின்றார், நாங்கள் அதில் ஒட்டப்பட்ட கொடிகளாக இருக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டு ள்ளது. நீங்கள் ஒரு குறிப்பிட்ட குழுவில் இணைந்திருப்பதாலோ, அல் லது இந்தப் பெயரையுடைய ஐக்கியத்திலே அங்கத்தவராக இருப்ப தாலோ ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜையாக இருப்பான் என்று பரிசுத்த வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. இயேசு வோடு இணைந்திருந்து, அவர் வழியாக, பிதாவாகிய தேவனின் சித் தத்தை செய்கின்றவனே தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜையாக இருப் பான் என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

இந்த உலகிலே தேவனால் அழைக்கப்பட்ட ஜனங்கள் கூடும் இடம் (கட்டிடம், வீடு, வெளியரங்கு) சபை அல்ல. தேவனுடைய ஜனங் களே சபையாக இருக்கின்றார்கள். இந்த உலகிலே சபை கூடி ஆரா திப்பதற்காக ஒரு பொதுவான ஸ்தலம் (இடம், கட்டிடம்) தேவை. அந்த சபைகூடுதலுக்கு ஒரு பெயர் தேவை. அந்த (சபையின் பெயர்) பெயர் அரசாங்க சட்டத்திற்கு அமைய ஒரு ஸ்தாபனமாக பதிவு செய்யப்பட வேண்டும். தேவ ஊழியத்தை முன்னெடுத்துச் செல்லும் தேவ ஊழியர்கள் அவசியம். அடுத்த தலைமுறையினராக குழந்தை கள், சிறுவர்கள், வாலிபர்கள் தேவ காரியங்களிலே முறைப்படி பயிற்று விக்கப்பட இப்படிப்பட்ட அமைப்பு இன்றியமையாதது. அந்த சபைகூ டுதல் (ஜனங்கள்) பிதாவாகிய தேவனின் சித்தத்தை செய்கின்றவர்க ளாக இருந்தால், அவர்கள் இயேசுவோடு சேர்ந்திருப்பார்கள். அவர்கள் பிதாவாகிய தேவனின் அங்கீகாரத்தை பெற்றிருப்பார்கள். ஆனால், தேவனுடைய கால அட்டவணையில் வாழ்கின்றோம் என்பதை மறந்து, தங்களையும், தங்கள் கிரியைகளையும், தங்களுக்கு உண்டானவை களையும் உயர்த்துகின்றவர்கள், அவர்கள் திரளாக இருந்தாலும், ஒரு வேளை இந்த உலகத்தின் அதிகாரிகளின் அங்கீகாரத்தை பெற்றிருந் தாலும், அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தவர்கள் அல்லர். அப்படிப்பட்டவர்களுக்கு இருப்பதெல்லாம், இந்த உலகிலே அரச கட்டளையின்படி பதிவுசெய்யப்பட்ட ஸ்தாபனம், அதன் சொத்து க்களாகிய கட்டிடங்கள், அந்த கட்டிடத்திலுள்ள பொருட்கள் மட்டுமே. இவை யாவும் இந்த உலகத்தோடு அழிந்து போகும்.

பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்றுகின்றவர்கள், கர்த்த ராகிய இயேசுதாமே, மிகுத்த ஆரவாரத்தோடும், திரளான தூதர்க ளோடும் வானத்திலே தோன்றும் நாளிலே, அதற்குரிய மிகுந்த பலனை பெற்றுக் கொள்வார்கள். அந்த நாளிலே, இவர்கள் இந்த பூவுலகத்திற

குரிய சபையின் பெயர், சபையின் கட்டிடங்கள், சபையின் சொத்ததுக் களை பற்றிக் கொள்ளப் போவதில்லை. மணவாளனாகிய இயேசுவோடு வாழ்வதையே வாஞ்சையாக கொண்டிருந்த அவர்களின் தாகம் தீர்க்க ப்படும்.

பிதாவாகிய தேவனின் சித்தம் செய்யாதவர்கள், தங்கள் கிரியைகளின் விளைவாகிய தண்டனையை பெற்றுக் கொள்வார்கள். ஒருவனும் தப்பி ப்போக முடியாது.

பிரியமானவர்களே, தேவன் ஆளுகை செய்கின்றார் என்பதை ஒரு போதும் மறந்து போய்விடாதிருங்கள். ஒருவனும் கெட்டுப்போவது அவ ருடைய சித்தம் அல்ல. வேதம் கூறுகின்ற பிரகாரமாக:

அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். மேலும் நடு கிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள் அவனவன் தன் -தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான். நாங்கள் யாவரும் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம். தேவனால் அளிக்கப் பட்ட கிருபையின்படி, ஒருவன் அஸ்திபாரம் போடுகின்றான், வேறொரு வன் அதின் மேல் கட்டுகின்றான். அவனவன் தான் அதின்மேல் இன்ன விதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக்கிற அஸ் திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவை களைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும் நாளா னது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளி ப்படுத்தப்படும் அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத் தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோ னால், அவன் நஷ்டமடைவான் அவனோ இரட்சிக்கப்படுவான் அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்.

மேன்மைபாரட்டுதல் எங்களுக்குரியதல்ல. (1 கொரந்தியர் 1:29). எனவே கர்த்தர் கட்டளையிட்டவைகளை செய்து முடித்த பின்பு, “நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத் திரம் செய்தோம் என்று எங்களை தாழ்த்துவோம். (லூக்கா 17:10)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களை வழிநடத்துவாராக!

# நீங்கள் விசேஷித்தவர்கள்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW OUR WEBSITE LINK]**

## பிரதான வசனம் : 1 பேதுரு 2:5

பிதாவாகிய தேவன் தாமே, இந்த உலகத்திலுள்ளவர்கள் இரட்சிப்படையும்படியாய், தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். ஆனால், மனிதர்கள் அவரை ஏற்றுக் கொள்ளாததினாலே, அவர்களே தங்கள் மேல் நித்திய ஆக்கினையை கொண்டு வருகின்றார்கள். இயேசுவை ஏற்றுக்கொண்ட நாங்கள், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாக கட்டப்பட்டுவருகின்றோம்.

ஒரு வாலிபன், தன் தகப்பனை எப்போதும் அசட்டை செய்து, அவரை குறித்து எந்த மதிப்புமற்றவனாக இருந்தான். இப்படியாக காரியங்கள் இருக்கும்போது, அவன் கொடுக்கும் பரிசுப்பொருட்களினாலும், முகஸ்துதியான வார்த்தைகளினாலும் அவன் தந்தை அவனில் பிரியமாக இருக்கமாட்டார். தன் தாயையும் தந்தையையும் கனம் பண்ணுவாயாக என்று வேதம் கூறியிருக்க, ஒருவன் அடிப்படையான அந்த காரியத்தை தள்ளி விட்டு, வேறு எந்த காரியத்தையும் செய்வானாக இருந்தால், அதினால் அவனுக்கு ஒரு பலனும் இல்லை.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலே, பலிகளை செலுத்தும் முறைமைகளை தேவன் கொடுத்திருந்தார். எனினும், உன்னுடைய ஆட்டு மந்தையின் நிணத்திலே (பலிகளிலே) நான் பிரியமாக இருப்பேனோ என்று கேட்டார். ஏனெனில், பலி கொடுக்கப்படும் ஆட்டுக்காடாக்களில் அல்ல, மனிதனுடைய இருதயம், தேவனை சார்ந்திருப்பதையே அவர் விரும்புகின்றார். ஒரு மனிதனுடைய இருதயம் தேவனோடு சார்ந்திருக்காவிட்டால், அவன் செய்யும் எந்த கிரியைகளினாலும் அவன் தேவனை பிரியப்படுத்த முடியாது. ஒரு மனிதனுடைய இருதயம் தேவனை சார்ந்திருக்காத போது, அவன் தேவனுக்கென்று வெளியரங்கமாக செய்யும் கிரியைகள் யாவும் மாய்மாலமுள்ளதாக இருக்கும். எனவே, முதலாவதாக எங்கள் இருதயம் தேவனுக்கு முன்பாக ஏற்புடையதாக இருந்தால், நாங்கள் அவர் சொன்ன காரியத்தை எங்கள் வாழ்க்கையிலே செய்கின்றவர்களாக இருப்போம்.

எங்கள் வாழ்க்கையைக் குறித்து, பல திட்டங்கள் அபிலாஷைகள் இருக்கலாம். அந்த திட்டங்கள் ஒன்றும், தேவன் எங்களுக்கென்று வைத்திருக்கும் திட்டத்திற்கு இடையூறாக இருக்கக்கூடாது. பிதாவாகிய தேவனுடைய சித்தம் எங்கள் வாழ்க்கையில் நிறைவேற வேண்டும். தேவன் எங்களைக் குறித்து ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். எங்களுக்கோ, அந்த திட்டத்தைக் குறித்ததான எண்ணம் இல்லை.

அவர் விரும்பும் காரியத்திற்கு எங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்காமல், நாங்களோ, என்னால் செய்யக்கூடியது இவ்வளவுதான், இதைத் தான் நான் உமக்கு தருவேன், நீர் அதிலே சந்தோஷப்பட வேண்டும் என்கின்றார்கள். அப்படியாக நாங்கள் வாழக் கூடாது.

எங்கள் தேவன் அன்புள்ளவர், அவர் குறிப்பிட்ட காரியத்திற்காக எங் களை அழைக்கின்றார். அதாவது, நாங்கள் தேவ சாயலாக இந்த பூமியிலே வாழ வேண்டும். தேவனுடைய ஜனங்களாய் நாங்கள் வாழ வேண்டும். தேவனுடைய மகிமையை நாங்கள் சொல்ல வேண்டும். இன்று பல மனிதர்கள், தங்கள் சிறு வயதிலிருந்தே, அநியாயத்தில் மகிழ்ச்சியடைகின்றார்கள். ஆனால் இந்த பூமியிலே, தேவனுடைய நாம த்தை சொல்கின்றவர்கள் யார்? தேவன் இருக்கின்றார் என்று சொல்கி ன்றவர் யார்? தம்முடைய மகிமையை சொல்லி வரும்படியாய் என்னை யும் உங்களையும் தெரிந்திருக்கின்றார். அந்த மகிமை, எங்கள் இருத யத்திலே இருந்து வரவேண்டும். அந்த மகிமை, எங்கள் இருதயம் தேவனோடு ஒப்புரவாக்குதலிலிருந்து ஆரம்பிக்கின்றது. பரிசுத்தமான ஜீவ பலிகளை செலுத்தும்படியாக, அவர் எங்களை ராஜரீகமான ஆசா ரியக்கூட்டமாய் அழைத்திருக்கின்றார்.

## ஆவிக்கேற்ற ஜீவ பலிகள் என்பதன் பொருள் என்ன?

எங்கள் வாழ்க்கையானது தேவனை மகிமைப்படுத்த வேண்டும். என்னுடைய வாழ்க்கையிலே தேவன் மகிமைப்படும்படி நான் செய்கின்ற ஒவ்வொரு கிரியையும் அவருக்கு ஆராதனையாக இருக்கின்றது.

கர்த்தருடைய அன்பு பெரியது. அவரை ஏற்றுக் கொண்டு, அவருடைய திருப்பணிக்கு தங்களை அர்ப்பணித்த அவருடைய சீஷர்கள், தேவ அன்பை நாங்களும் பெற்றுக் கொள்ளும்படிக்கு, தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். அவர்களுடைய அர்ப்பணிப்பாலே, எங்கள் உபத்திரவமான வேளையிலே, கைவிடப்பட்ட நேரத்திலே, கர்த்தர் தரும் இரட்சிப்பை நாங்கள் அடையக்கூடியதாக இருந்தது. இவ் விதமாக இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்த மான ஜனமாயும் அழைக்கப்பட்டோம். எங்களுடைய வாழ்க்கை இந்தப் பூமிக்குரியதல்ல, இந்த பூமியோடு முடிவடைவதில்லை. ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கின்றோம். ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக் குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாக நியமிக்கப்பட்ட நாங்கள் விசேஷித்த வர்களாக இருக்கின்றோம்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும் இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்) தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

# வளர்ந்து பெருகுங்கள்

பாடசாலைக்கு செல்லும் சிறார்களிடம், தங்கள் தாய் அல்லது தந்தையாரைப் பற்றி சில வார்த்தைகள் எழுதும்படி சொன்னால், அவர்கள் தங்கள் வயதின் அறிவுக்கு எட்டியபடி, தங்கள் உள்ளத்தில் உள்ளதை எழுதுவார்கள். குறிப்பாக கையளவு எண்ணிக்கை உள்ள சிறார்கள் இதற்கு விதிவிலக்காக இருந்தாலும், பொதுவாக, அந்த மழலைச் செல்வங்களுக்கு, தங்கள் பெற்றோர் படும் பிரயாசத்தின் ஒரு துளியையே அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். சில வேளைகளிலே, ஏன் பெற்றோர் இப்படி நடந்து கொள்கின்றார்கள் என்பதை, சின்ன வயதிலே, அவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது. ஆனால் காலங்கள் கடந்து செல்லச் செல்ல, வாழ்க்கையின் அனுபவம் பெருகும்போது, வாழ்க்கை என்ன என்பதையும், தங்கள் பெற்றோரின் பிரயாசங்களைக் குறித்த அறிவும், நன்றியும் அவர்களிடம் பெருகுகின்றது. அவர்கள் வளர்ந்து ஒரு கட்டத்திலே தாங்களும் பெற்றோராக மாறுகின்றார்கள். இதற்கொத்ததாகவே எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியும் இருக்கின்றது. தேவனைப் பற்றிய அறிவில் முற்றாக ஒருவரும் வளர்ந்து தேறுவதற்கு ஆண்டுகள் போதாது. அவருடைய அன்பின் அகல, ஆழ, உயரம், மனித அறிவினால் கிரகிக்க முடியாதது. அந்த அன்பின் சுவை ஒரு தனி ரக அனுபவம். அதை வர்ணிப்பதற்கு மனிதனுடைய அறிவும் மொழியும் போதாது. தேவனை அறிந்த ஆரம்ப நாட்களிலிருந்து அவரை அறியும் அறிவில் நாங்கள் வளர்ந்து பெருகும் போது, தேவனுடைய அநாதி தீர்மானத்தை உணர்ந்து கொள்கின்றோம். தேவனை அறிகின்ற அறிவில், உண்மையாக, பல ஆண்டுகளாக வளர்ந்து வருகின்ற மனிதன், தேவனை ஏற்றுக்கொண்ட புதிய சகோதரரின் நிலையை நன்றாக உணர்ந்து நீடிய பொறுமையோடும், சாந்தத்தோடும், அன்பு நிறைந்த சிட்சையோடும் அவர்களை வழிநடத்துவான். எனவே நாங்கள் கர்த்தரை அறிகின்ற அறிவில் வளர்ந்து வரும்போது, அவரைப் போல நாங்களும் மாற்றமடைகின்றோம். அப்படி அவரைப் போல மாறும் போது, அதன் அறிகுறியாக, அவருடைய திவ்விய சுபாவங்கள் எங்களிலிருந்து வெளிப்பட வேண்டும்.

**2 பேதுரு 3:18**

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்.

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, உம்மை அறிகின்ற அறிவில் வளர்ந்து, உம்முடைய திவ்விய சுபாவங்கள் என்னில் வெளிப்படும்படியாய் எனக்கு அருள் புரிவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் ஒருவரே நீதிபரர்

யோபு என்னும் பக்தனுடைய வாழ்வில் நடந்த சம்பவத்தை நாங்கள் அறிந்திருக்கின்றோம். அவனுக்கு உண்டாயிருந்த உலக ஐசுவரியம் யாவும் அவனைவிட்டு எடுக்கப்பட்டது. அவன் சரீரம் முழுவதும் பருக் களால் நிறைந்திருந்தது. அவனுக்கு ஆதரவு ஏதும் இருக்கவில்லை. ஆனாலும் அவன் தேவனை பற்றும் விசுவாசத்தில் தளராதிருந்தான். இறுதியிலே, தேவன் தாமே, அவனை இரண்டு மடங்காக ஆசீர்வதித்தார். இன்று எங்கள் மத்தியில், உடன் சகோ தரர் ஒருவருக்கு, யோபுவுக்கு ஏற்பட்ட அழிவைப் போன்ற நிலைமை உண்டா னால் அதை குறித்து என்ன கூறு வோம்? அவன் பாவம் செய்திருக்கி ன்றான் என்று கூறுவோமா? அல்லது அவன் பரிசுத்தவான் என்று கூறு வோமா? அல்லது இவனுடைய பரம் பரை சாபம் இவனைத் தொடருகின் றது என்று கூறுவோமா? சற்று சிந்தித் துப் பாருங்கள். தேவ மனிதனாகிய பவுல், இன்று கிறிஸ்தவர்கள் மத் தியிலே, பெரும் கனத்தை பெற்றிருக்கின்றார். ஆனால், அன்று அவர் தேவனை அறியாதவர்கள் மத்தியிலே, மீட்பின் நற்செய்தியின் நிமித்தம், பலதரம் அடிக்கப்பட்டு, கல்லெறியப்பட்டு, சிறையிலே போடப்பட்டிரு ந்தார். அவர் சிறையிலிருந்து எழுதிய நிருபங்களை நாங்கள் இன்று மேன்மையாக எண்ணிக் கொள்கின்றோம். இன்று எங்கள் உடன் சகோ தரர்களில் ஒருவர் நற்செய்தியின் நிமித்தம் சிறையிலிடப்பட்டால், அவரை ஏற்றுக் கொள்ளுவோமா? அல்லது ஞானமில்லாமல் நடந்து கொண்டான் என்று கூறுவோமா? பிரியமானவர்களே, நாங்கள் ஒரு சம் பவத்தைக் குறித்து விமர்சிக்கலாம்,அதற்கு யாரும் தடை போடப் போ வதில்லை. அல்லது ஒரு காரியத்தைக் குறித்து, தீர்க்கமான முடிவை எங்கள் மனதில் வைத்திருக்கலாம். ஆனால், தேவனுடைய முடிவே முடிவு. அவருடைய வசனமே ஜீவன். அவருடைய நீதியே நீதி. அவரே நீதியுள்ள நியாயாதிபதி. எனவே, எங்களைச் சூழ நடக்கின்ற சம்பவங்களைக் குறித்து விமர்சிப்பதிலும், மனதில் நிர்ணயம் செய்வ தைக் குறித்தும் எச்சரிக்கையாயிருப்போம். நாங்கள் நிற்பதும் நிர்மூல மாகாதிருப்பதும் தேவனுடைய கிருபையே. நாளை எங்கள் கரத்தில் இல்லை. எனவே கிருபையின் நாட்களை பிரயோஜனப்படுத்துவோம்.

**யாக்கோபு 4:12**

நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒரு வரே, அவரே இரட்சிக்க வும் அழிக்கவும் வல்ல வர் மற்றவனைக் குற்றப் படுத்துகிறதற்கு நீ யார்?

**ஜெபம்**: நீதியின் தேவனே, நீர் ஒருவரே நீதிபரர். மற்றவர்களை குற்றப்படுத்தாமல் வாழும்படியும் உம்முடைய ஆளுகையை நான் அறிந்து கொள்ளும்படியுமான ஞானத்தை எனக்குத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தராலேயே காரியம் வாய்க்கும்

ஒரு முறை, "இயேசு கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது, திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள். அப்பொழுது கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்கள் அவைகளை விட்டிறங்கி, வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு அந்தப்படவுகளில் ஒன்றில் ஏறினார், அது சீமோனுடையதாயிருந்தது. அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு, அந்தப்படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார். அவர் போதகம்பண்ணி முடித்தபின்பு சீமோனை நோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான். அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்குச் சைகைகாட்டினார்கள் அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள்." அதிகமாய் பிரயாசப்பட்டும், பிரயாசத்தின் பலனை காணாதவிடத்து, மனிதர்கள் இளைத்துப் போய்விடுகின்றார்கள். சில வேளைகளிலே, தேவன் இருக்கின்றார் என்பதை நாங்கள் மறந்து போய்விடுகின்றோம். படிக்கின்றோம், உழைக்கின்றோம், உண்கின்றோம், உறங்குகின்றோம், எழுகின்றோம் என்ற வட்டத்தில் உலகம் தன் பாட்டிற்கு போய் கொண்டிருக்கின்றது என்பது போல, தேவனுடைய பிள்ளைகளும், வாழ்ந்து விடுவோம் என்று எண்ணுகின்றார்கள். ஆனால், அன்புள்ள தேவனோ, தம்முடைய பிள்ளைகளுக்கு, தாம் யார் என்பதையும், காரியங்கள் எப்படியாக நடக்கின்றது என்பதையும், இந்த உலக வாழ்விலே எங்கள் கருப்பொருள் என்ன என்பதையும், எங்கள் வாழ்க்கையின் நிகழ்வுகள் வழியாக தம்மை வெளிப்படுத்தி, தமக்குள் எங்களை ஸ்திரப்படுத்தியும் வருகின்றார். எப்படியும் வாழலாம் என்று இந்த உலக போக்கின்படி செல்லாமல், எங்கள் செய்கைகளை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து வாழ வேண்டும். அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுகின்றவர்.

**நீதிமொழிகள் 16:3**

**உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்.**

**ஜெபம்**: சகலத்தையும் ஆளும் தேவனே, உம்மாலேயே காரியம் ஆகும், நீரின்றி அன்பு வாழ்வு இல்லை என்பதை நான் உணர்ந்து, உம் வார்த்தையின் வெளிச்சத்தில் வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கண்கள் இலக்கின் மேலே

உதைபந்தாட்ட இறுதிப்போட்டி மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள், மைதானத்திலே கரகோசம் செய்து தங்கள் தங்கள் அணியை ஊக்குவித்துக் கொண்டிருந்தார்கள். அதி திறமைவாய்ந்த வீளையாட்டு வீரர்கள் சிலர், ஒரு அணியில் இருந்தார்கள். அந்த அணியை எதிர்த்து விளையாடும் அணியின் பந்துகாப்பாளன் (goalkeeper), பந்தை தடுத்து பிடிப்பதில் மிகவும் சிறந்து விளங்கினான். அதன் இரகசியம் என்ன என்று அவனிடம் கேட்டபோது. “எப்படிப்பட்ட வீரர்கள் எங்கள் அணியை எதிர்த்து விளையாடுகின்றார்கள் என்பதை நான் பார்ப்பதில்லை. எத்தகைய ஆதரவு ரசிகர்களிடம் இருந்து எழுகின்றதென்பதை நான் கேட்பதில்லை. எப்போதும் என் கண்களை பந்தின் மேல் பதித்து வைத்து கொள்வேன்” என்று பதில் கூறினான். அதாவது அவனுடைய நோக்கம் எல்லாம், எப்படிப்பட்ட வீரனாகிலும் அந்த பந்தை, எப்படியாக இலக்குக்குள் அடித்தாலும், அவன் நோக்கமெல்லாம் அந்த பந்தை பிடிப்பதாகவே இருந்தது. பிரியமானவர்களே, எங்கள் வாழ்க்கையின் இலக்கு என்ன என்பதை திட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். எங்கள் வாழ்வின் பிரதானமான நோக்கம் என்ன? சட்டதிட்டங்களை எங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றுவதா? சட்டங்களை மற்றவர்கள் வாழ்க்கையில் அமுல்படுத்துவதா? அல்லது எங்கள் கிரியைகளை நியாயப்படுத்துவதா? அவைகள் அல்ல. நாங்கள் தேவசாயலாக மாறி, கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பங்காளிகளாயிருக்கு ம்படி, பிதாவாகிய தேவனின் சித்தம் செய்வதே எப்போதும் எங்கள் இலக்காக இருக்க வேண்டும். இந்த உலகிலே, என்ன தான் நேர்ந்தாலும், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராட வேண்டும், அந்தபோராட்டத்தின்பலன் எங்கள் உள்ளான மனிதனில் ஏற்படும் தேவ சாயலாகவே இருக்க வேண்டும். நாங்கள் ஆராதிக்கின்ற தேவன், ஒரு இலக்கை நியமித்து, அதை எங்கள் பெலத்தால் அடைய வேண்டும் என்று சொல்லி, எங்களை தனியே விட்டுவிடுகின்றவர் அல்லர். எங்கள் தேவன் எங்களோடு இருந்து எங்களை நடத்திச் செல்கின்றவராயிருக்கின்றார்.

**பிலிப்பியர் 3:14**

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித்தொடருகிறேன்.

ஜெபம்: சர்வ வல்லமையுள்ள தேவனே, சூழ்நிலைகளையும், எங்களை சுற்றியிருக்கும் மனிதர்களையும் நோக்கிப் பார்த்து மனந்தளர்ந்து போகாமல், வாழ்வின் இலக்கை நோக்கி ஓடும்படி என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இதய வாஞ்சைகள்

மனிதனின் இதயத்திலே ஆயிரம் எண்ணங்கள் உதிக்கும் என ஒரு பக்தன் பாடினான். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்." இன்று எங்கள் இருதயங்கள் என்னத்தினால் நிறைந்திருக்கின்றது என சற்று ஆராய்ந்து பார்ப்போம். ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும், அவன் வாஞ்சிக்கின்ற காரியங்கள் குடி கொண்டிருக்கும். உதாரணமாக, நாளை தன் பிறந்த நாளைக் கொண்டாடவிருக்கும் சிறுமியின் இருதயத்தில், தன்னுடைய பிறந்த நாள் கொண்டாட்டத்தை குறித்த பரபரப்பு நிறைந்திருக்கும். முதல் தடவையாக, வேலைக்கு செல்லும் வாலிபனின் இதயத்தில் அதைக் குறித்த எண்ணம் இருந்து கொண்டிருக்கும். மதுபானத்தை பருகி, அதை வாஞ்சிக்கின்றவர்களின் இருதயம், மாதுபானம் அருந்தும் அடுத்த சந்தர்ப்பத்தை நோக்கி காத்திருக்கும். தேவனைத் துதிக்க வாஞ்சையுள்ளவனின் இருதயம் துதியின் வேளையை எதிர்பார்த்துப் பரவசம் அடையும். குறைகளை நோக்குகின்றவனின் இருதயத்தில் மற்றவர்களின் குறைவுகள் அதிகதிகமாக தெரியும். ஒருவரும் கெட்டுப் போகாமல், யாவரும் பரலோகம் செல்ல வேண்டும் என்ற வாஞ்சையுள்ளவனின் இருதயத்தில் ஆத்தும பாரம் இருக்கும். இப்படியாக நாம் பட்டியல் படுத்திக் கொண்டே போகலாம். எங்கள் இருதயங்கள் எதனால் நிறைந்திருக்கின்றது? எதை வாஞ்சிக்கின்றது? என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிராகாரங்களின் மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது. என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது. என்று சங்கீதக்காரன் பாடினார். ஏனெனில், அவருடைய இருதயம் தேவ சமுகத்தைக் குறித்து எப்போதும் தாகமாயிருந்தது. எங்களுடைய இருதயத்தின் தியானங்கள் தேவனைக் குறித்ததான ஆசையாக இருக்க வேண்டும். மாம்சத்தின் சிந்தைகளுக்கு இடம் கொடுப்போமென்றால், அந்த இருதயம் தேவனுக்கு பிரியமாக இருக்காது.

**நீதிமொழிகள் 4:23**

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**

கிறிஸ்துவின் பாடுகளின் தியானம், இயேசுவுக்காக கண்ணீர் விடுவதல்ல, மாறாக எங்கள் வாழ்க்கை பரிசுத்தமாக வேண்டும்

**ஜெபம்:** உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, என் இதயத்திலே உமக்கு பிரியமில்லாத மாம்ச சிந்தைகள் குடி கொள்ளாதபடி, இதயத்தைக் காத்துக் கொள்ள என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# புதிதாக்கப்படுகின்ற நேரம்

உங்கள் உள்ளான மனிதன், நாளுக்கு நாள் கிறிஸ்துவுக்குள் புதிதாக்கப்பட்டு வருகின்றதா? அதை அவ்வப்போது நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த சஞ்சிகையிலுள்ள தியானக் குறிப்புக்கள், உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் நன்மையான மாற்றங்களை உண்டாக்க வேண்டும் என்ற உந்துதலை தரும்படியான நோக்கத்துடன் எழுதப்பட்டிருக்கின்றது. தேவ வாக்கியங்கள் யாவும் ஆவியும் ஜீவனுமாயிருக்கின்றது. உங்களுக்கு உதவும்படி தூய ஆவியானவர் தாமே எப்போதும் சித்தமுள்ளவராக இருக்கின்றார். ஆனால், நான் மாற்றமடைய வேண்டும், நாம் மறுரூபமாக வேண்டும் என்கின்ற எண்ணமும், தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டுமென்கிற இருதயமும் எம்மிடம் இருக்க வேண்டும். உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் பாதையில், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கடைசியாக நீங்கள் எடுத்த தீர்மானம் என்ன? அதை எப்போது எடுத்தீர்கள்? பல ஆண்டுகளாக அப்படியான தீர்மானங்கள் ஒன்றும் எடுக்கவில்லை என்றால், உங்கள் வாழ்க்கையை நன்கு ஆராய்ந்து பார்ப்பது உங்களுக்கு நன்மையைத் தரும். எடுத்துக்காட்டாக, மற்றவர்களுடைய குறைகளை பற்றி பேசும் பழக்கம் உள்ளவரின் இருதயத்திலே குறைகளை குறித்த வாஞ்சை இருக்கும். அதனால் தான் அப்படிப்பட்டவர்கள் மற்றவர்களின் குறைகளிலே அதிக நாட்டமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இனி நான் சகோதரருக்கு விரோதமாக பேசப் போவதில்லை, மற்றவர்களின் குறைவு நிறைவாக வேண்டும் என்று நேரம் எடுத்து ஜெபிக்கப் போகின்றேன். இப்படியான தீர்மானம் எங்கள் உள்ளானமனிதனின் புதிதாக்குதலுக்கு நன்மையானது. பல செயற்திட்டங்களை செய்து வருகின்றேன், வறியோருக்கு உதவுகின்றேன், சபைக்கு சென்று வருகின்றேன் ஆனால் கடைசியாக உள்ளான மனிதனுக்குரிய புதிதாக்குதலை குறித்ததான தீர்மானத்தை எப்போது எடுத்தேன் என்பது தெரியாது என்போமாகில், நாங்கள் அதைக்குறித்த ஆசை அற்றவர்களாக இருக்கின்றோம் என்பதையே குறிக்கின்றது.

**பிலிப்பியர் 3:12**

நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.

**ஜெபம்**: பரிசுத்த பிதாவே, அடைந்தாயிற்று, தேறினவனானேன், என்று பெருமை கொள்ளாமல், இன்னும் பரிசுத்தமாகும்படிக்காய் உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நித்தியமானவைகளை நாடுங்கள்

"போலிகளை குறித்து எச்சரிக்கையாயிருங்கள" என்று ஒரு பிரபல்யமான ஆடை உற்பத்தியாளர் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஊடகங்கள் மூலம் தெரிவித்திருந்தார். அந்த உற்பத்தியாளர் உற்பத்தியாக்கும் பிரபல்யமான வர்த்தகச் சின்னத்தில் (Brand name) வேறு சிலர், தரம் குறைந்த பொருட்களை உற்பத்தி செய்து, மலிவு விலையில் விற்பனை செய்து, வாடிக்கையாளர்களை ஏமாற்றி வந்ததால், அப்படியான எச்சரிப்பை வழங்கினார்கள். இந்த உலகிலே மனிதர்கள் அன்பு, நம்பிக்கை சமாதானம் போன்றவற்றைப்பற்றி அதிகம் பேசிக் கொள்வார்கள். இந்த குடும்பத்தினர் எங்களை உண்மையாக அன்பு செய்கின்றார்கள் என்று நம்பியிருந்தேன், ஆனால் அது போலி என்பதை உணர்ந்து கொண்டேன் என்று மனிதர்கள் சொல்லுவதை கேட்டிருக்கின்றோம். நாங்கள் அறிய வேண்டிய காரியம் என்னவென்றால், சூரியனுக்கு கீழ் மனிதன் படும் பிரயாசம் மாயை. ஏனெனில் அநித்தியமான உலகிலே நித்தியமானவைகளை கண்டு கொள்ள முடியாது. நாங்கள் நித்தியமானதை கண்டு கொள்ள வேண்டுமென்றால் நித்தியமானவரோடு இணைந்து இருக்க வேண்டும். நானே மெய்யான திராட்சை செடி, ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள் அவைகள் எரிந்து போம் என்று இயேசு சொன்னார். இயேசுவே அன்பின் ஊற்று. அவரே சமாதானம் தருகின்றவர், அவரே நம்பத்தக்க தேவன். அவரே நித்தியமானவர். நாங்கள் அவருடன் ஒட்டப்பட்டிருந்தால், அவருடைய மாறாத அன்பு, நித்திய சமாதானம், எங்களோடு இருக்கும். நாங்கள் ஒருபோதும் ஏமாற்றம் அடைந்து போவதில்லை. ஆனால் இந்த உலகத்தை சார்ந்து, இந்த உலகம் தரும் போலியான அன்பிலும் சமாதானத்திலும் திருப்தியடைய முயற்ச்சி செய்வோமென்றால், பெரிதான ஏமாற்றத்திற்குள்ளாவோம். போலிகளுக்கு பிரவுவாகிய பிசாசானவன் துரிதமாக தரும் தற்காலிகமான மாயைக்குள் சிக்கி விடாமல், நித்தியர் இயேசுவை சார்ந்திருப்போம்.

**யோவான் 14:27**

**என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை.**

**ஜெபம்**: என்றும் மாறாத தேவனே, அழிந்து போகும் இந்த உலகம் தரும் போலியானதும் அநித்தியமானதுமான சமாதானத்தை பற்றிக் கொள்ளாமல், உம்மைப் பற்றிக் கொள்ள எனக்கு கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசுவே பரலோகத்தின் வாசல்

கர்த்தராகிய இயேசு இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களில் இருந்த பல யூதமதத் தலைவர்கள், தங்களுடைய கொள்கைளுக்கும், மதத்திற்கும் கர்த்தராகிய இயேசு கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும் என்று எதிர் பார்த்தார்கள். அதாவது, தாங்கள் செய்யும் குற்றங்களை குறித்து இயேசு பேசக்கூடாது, தங்களுடைய ஆலோசனைச் சங்கத் தின் நியதிகளுக்கு இயேசு கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்றும், தாங்கள் மட்டுமே தேவனுடைய பிரதிநிதிகள் என்றும் அகங்காரம் கொண்டார்கள். ஆனால் நாங்களோ, நாங்கள் செல்லும் ஆலயமோ, அப்படியான நிலைக்கு தள்ளப்பட்டுப் போய்விடக்கூடாது. இயேசு கிறிஸ்து ஒருவரே பரலோகத்தின் வாசலாக இருக்கின்றார். (யோவான் 10:9) அவரே வாழ்வைக் கண்டடையும் வழியாக இருக்கின்றார். இயேசு கிறிஸ்துவாலே அன்றி ஒருவரும் பிதாவினிடத்திற்கு வர முடியாது (யோவான் 14:6). தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே (1 தீமோ 2:5-6). இயேசுவுக்கு நிகரானவர் ஒருவருமில்லை. அவருக்கு பதிலீடாக எவரையும் வைக்க முடியாது. என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கின்றான் என்று இயேசு கூறினார். அன்றியும் மனுஷகுமாரன் (இயேசு) தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். (மத்தேயு 25:31). இயேசுவுக்கு பதிலீடாக வேறொருவர் இல்லை. எங்களில் எவரும் பரலோகத்தின் வாசல் ஆகிவிட முடியாது. கர்த்தருக்குள் நித்திரையடைந்த (இவ்வுலகத்தை விட்டு கடந்து சென்றிருக்கின்ற) பரிசுத்தவான்கள் பரலோகத்தின் வாசல் அல்ல. இந்த உலகிலே உள்ள ஒரு குறிப்பிட்ட சபையினர் மாத்திரம் பரலோகத்தின் வாசல் ஆக முடியாது. இப்பூமியிலே நாங்கள் வாழும் நாட்களில் மற்றவர்களை நியாயந்தீர்ப்பதை விட்டு விட்டு, பிதாவாகிய தேவனின் திருச் சித்தத்தை நிறைவேற்றுவதே, நாங்கள் எங்கள் ஆத்துமாவிற்கு செய்யக்கூடிய நன்மை.

**யோவான் 10:9**

நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்புஞ்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்.

**ஜெபம்:** அன்பின் தேவனே நீர் என்னையும் நேசித்தீர் என்பதை மறந்து, நான் ஒருவனே பரிசுத்தன் என்ற மனமேட்டிமையை நான் அடையாமல், மற்றவர்களுக்கும் உம் அன்பை அறிவிக்க என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**செவ்வாய் | சித்திரை 9** | 📖 மாலை வாசகம் – யாக்கோபு 1:22

# தேவனோடுள்ள உறவு

தொழிற்சாலை ஒன்றிலே, சுகாதாரத்தையும் பாதுகாப்பையும், நெறிப்படுத்தும் இயக்குனர், ஒவ்வொரு மாதாமும் சுகாதாரமாக வாழ்வதைக் குறித்து பல பாடங்களை சொல்லிக் கொடுத்து வந்தார். அந்த தொழிற்சாலையிலே, உயர்பதவியிலே இருக்கும் அவருக்கு, நிச்சயமாக சுகாதாரத்தைக் குறித்தும், பாதுகாப்பைக் குறித்தும் அதிக காரியங்கள் தெரியும். அவர் அதற்குரிய பாடங்களை கலாசாலையில் படித்து பட்டம் பெற்றவர். அதைக் குறித்த புத்தக அறிவு அவருக்கு அதிகம் இருந்தது, ஆனால் அவரோ புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். அவருடைய கல்வியினால், அவர் கைநிறைய உழைத்தாலும், அந்த கல்வி அறிவு அவருடைய சுகாதாரத்திற்கு, எந்த பலனையும் கொடுக்கவில்லை. பிரியமானவர்களே, நாங்கள் தேவனை அறிகின்ற அறிவில் வளர வேண்டும் என்று பிரயாசப்படுகின்றோம். அதன் ஒரு படியாக, பரிசுத்த வேதாகமத்தை கற்றுக் கொள்ள வாஞ்சிக்கின்றோம். இது ஒரு நல்ல வாஞ்சை, அதை விட்டுவிடாதிருங்கள். ஆனால், தேவனை அறிகின்ற அறிவு, எங்கள் அறிவோடு நின்றுவிடக்கூடாது. தேவனை அறிகின்ற அறிவு, எங்களுக்கும் தேவனுக்கும் உள்ள தனிப்பட்ட உறவின் அனுபவத்திலேயே வளர்ந்து வருகின்றது. உதாரணமாக, ஆவியினாலும், ஜலத்தினாலும், மறுபடி பிறக்கின்றோம் என்பதைக் குறித்து படிப்பது நல்லது ஆனால் மறுபடியும் பிறந்த அனுபவம் இல்லை என்றால், மறுபிறப்பைக் குறித்த அறிவினால் எங்கள் ஆத்துமாவிற்கு பலன் இல்லை. இவ்வண்ணமாகவே, பரிசுத்த வேதாகமத்தை கற்று, கற்றவைகளை எங்கள் வாழ்க்கையில் செயற்படுத்த வேண்டும். அப்படி வேதாகமத்தை கலாசாலைகளில் கற்று கலாநிதி பட்டம் பெற்றாலும், தேவனுடைய வார்த்தைகள் எங்கள் அனுபவத்தில் இல்லை என்றால், அந்த படிப்பினால் அதிக இளைப்பு உண்டாகும். அந்த கல்வியினால் இந்த உலகில் அங்கீகாரம் கிடைக்கலாம், நன்றாக உழைக்கலாம். அவை யாவும் இந்த உலகத்தோடு அழிந்து போகும். நாங்கள் அப்படி இருக்காமல், திருவசனத்தை கற்று அதன்படி நடக்கின்றவர்களாக மாறுவோம்.

**1 பேதுரு 2:3**

**நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமி ல்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, உம்முடைய திருவார்த்தைகளை கற்று, அந்த வார்த்தைகளின்படி உம்மோடு வாழும் அனுபவத்தில் நாள் தோறும் வளர்ந்து பெருக எனக்கு உதவி புரிவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய வழிகள்....

தேவனை அறிந்த ஒரு கும்பத்தினரின் வாழ்வு செழிப்பாக ஓடிக்கொண்டிருந்தது. குடும்பத் தலைவன், கையிட்டு செய்யும் காரியங்கள் யாவையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணினார். அந்த அயலிலுள்ள இன்னுமொரு மனிதனோ பல நெருக்கடிகள் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருந்தான். அலையலையாய், பல இன்னல்கள் அவன் வாழ்க்கைப் படகை மோதிய போதும், நெறிமுறை தவறாமல், கர்த்தருடைய வழியிலே சென்று கொண்டிருந்தான். நெருக்கடியில் இருக்கும் இந்த மனிதனை, செழிப்பாக வாழும் குடும்பத்தின் தலைவன் சந்திக்க நேர்ந்தது. அந்த வேளையிலே, செழிப்பாக வாழ்கின்றவன்: என்னைப் பார், என் குடும்பத்தைப் பார், என் நிலையைப் பார், என்னுடைய காரியங்கள் எப்படியாக கைகூடி வருகின்றது என்பதைப் பார் என்று, தன்னுடைய செல்வாக்கையும், தேவ ஆசீர்வாதத்தையும் பற்றி அவனுக்கு போதித்தான். அவனுடைய போக்கின் தொனி, என்னை தேவன் இவ்வளவாய் ஆசீர்வதித்திருக்கின்றார், ஆனால் நீ ஏன் இவ்வளவு கஷ்டப்படுகின்றாய் என்று பொருட்படும்படியாய் இருந்தது. கிறிஸ்து இயேசுவுக்குள் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டவர்கள், காலங்கள் கடந்து சென்றதும், தேவ கிருபையை தங்கள் வாழ்க்கையில் மேன்மைப் படுத்துவதற்கு பதிலாக, தங்கள் பிரயாசத்தை (கைகளின் கிரியைகளை) மேன்மைப்படுத்தி, நாங்கள் 'ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்' என்ற நற்பெயரின் கீழ் வாழ்ந்து வருகின்றார்கள். இதனால், அந்த ஆசீர்வாதம், அவர்கள் வாழ்க்கையில் பெருமையை உண்டுபண்ணுவதால், அந்த ஆசீர்வாதத்தை அவர்கள் தங்களுக்கு கண்ணியாக மாற்றிவிடுகின்றார்கள். அநேக தேவ பிள்ளைகள் தேவ பணிக்காக, பல இன்னல்கள் மத்தியிலும் தேவ பணியை மனமகிழ்ச்சியோடு செய்து வருகின்றார்கள். அது அவர்களை குறித்து பிதாவாகிய தேவனின் ஏற்பாடாக இருந்தால், அதைப்பற்றி விமர்சிக்கின்றவர்கள், தேவ சித்தத்திற்கு எதிர்த்து நிற்கின்றவர்களாகி விடுவார்கள். எனவே, நாங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**ரோமர் 9:20**

அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா?.

**ஜெபம்**: சகலமும் படைத்தவரே, நீர் உம்முடைய விருப்பம் போல, உம்முடைய பிள்ளைகளை நடத்தி, முடிவிலே அவர்களை மகிமையிலே சேர்க்கின்றவர் என்பதன் கருத்தை உணர்ந்து வாழ கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| வியாழன் \| சித்திரை 11 | 🕮 மாலை வாசகம் – 2 கொரி 13:5 |
|---|---|

# மறுபரிசீலனை

தேவனோடுள்ள உறவில் வளர்ந்து வருகின்றவர்கள், தங்கள் நிலையை அவ்வப்போது ஆராய்ந்து அறிய வேண்டும். நான் இப்போது எங்கே நிற்கின்றேன்? எங்கே போகின்றேன்? என்ன செய்கின்றேன்? என்ற கேள்விகளை எங்களிடம் நாங்கள் கேட்டு, வேத வார்த்தைகளின்படி எங்களை மறுபரிசீலனை செய்து, முன்னேறிச் செல்ல வேண்டும். வேத வாசிப்பு, ஜெபம், சபை கூடிவருதல் போன்றவை, தேவனோடு வாழும் வெற்றியுள்ள வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகள். அவற்றை ஆர்வமுடன் செய்து வரவேண்டும். வேத வாசிப்பு, ஜெபம், சபை கூடிவருதலை ஒழுங்காக செய்து வருகின்றவர்கள், அவற்றால் தங்கள் வாழ்க்கையில் வந்த மாற்றங்கள் குறித்து, வருடத்திற்கு ஒரு முறை என்றாலும் மறுபரிசீலனை செய்ய வேண்டும். நாங்கள் எங்களை ஆராய்ந்து எங்கள் நிலையை அறிவதற்கான சில கேள்விகளை எங்களிடம் நாங்களே கேட்க வேண்டும். எனக்கெதிராக மற்றவர்கள் குற்றம் செய்தபோது, அல்லது தவறாக பேசினபோது, என்ன செய்தேன்? அவர்களை மன்னித்துவிட்டேனா? அவர்களுக்காக ஜெபம் செய்து வருகின்றேனா? அல்லது அவர்களுக்கு பதிலடி கொடுத்தேனா? பதிலடி கொடுக்கும்படி சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றேனா? இப்படியாக பல கேள்விகளை நாங்கள் எங்களிடம் கேட்டுக்கொள்ளலாம். சபையில் பிரச்சனைகள் தலை தூக்கும் போது, என்ன செய்தேன்? மற்றவர்கள் குற்றத்தில் அகப்பட்ட போது என்ன செய்தேன்? இப்படியாக எங்கள் வாழ்க்கையின் நிலையை நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். உள்ளான மனுஷனானவன் நாளுக்குநாள் புதிதாக்கப்பட வேண்டும். வாகனத்தை ஓட்டிச் செல்கின்றவன், சாலை ஒழுங்கின் வேகத்தின்படி ஓட்டுவதற்கு, வேகத்தை அளவிடும் கருவியை அவ்வப்போது பார்த்து தன் வேகத்தை மாற்றிக் கொள்வான். தன் வாகனத்திற்கு பின்பாக என்ன நடக்கின்றது என கண்ணாடிகளிலே பார்த்துக் கொள்வான். அது போல கிறிஸ்துவுக்குள்ளான எங்களுடைய பயணமும் இருக்க வேண்டும். என் கண் போன போக்கிற்கு போவேன் என்று வாழாமல், எங்கள் நிலையை ஆராய்ந்து அறிந்து, திருத்த வேண்டியவைகளைத் திருத்தும்படியாக, கர்த்தரிடத்தில் திரும்புவோம்.

**புலம்பல் 3:40**

**நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்.**

**ஜெபம்:** வழிகாட்டும் தேவனே, கண்போன போக்கில் வாழ்க்கையை நடத்தாமல், என் வாழ்க்கையில் நீர் விரும்பும் திவ்விய சுபாவங்கள் உருவாகும்படிக்கு என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரசங்க பீடம்

பிரசங்க பீடத்தில் நின்று போதிக்க வேண்டும், வேத பாடங்களை கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை பலருக்கு உண்டு. போதிப்பவர்கள் வழியாக, தேவ செய்தி, வேதபாடங்கள் மற்றும் எங்களை பக்திவிருத்தியடையச் செய்யும் ஆலோசனைகள் கொடுக்கப்படுகின்றது. ஆலயங்களிலே, போதிப்பவர்கள், கிழமைதோறும், ஒரு சில மணித்தியாலங்களே பிரசங்க பீடத்தில் நிற்கின்றார்கள். ஆனால், தேவனுடைய பிள்ளைகள் யாவருக்கும் (போதகர்கள், விசுவாசிகள்), அவர்களுடைய வாழ்க்கையே பிரசங்கபீடமாக இருக்கின்றது. எங்கள் அன்றாட வாழ்க்கை மற்றவர்களுக்கு போதகமாக இருக்கின்றது. அந்த பிரசங்க பீடத்திலே (நம்மில்) தேவ நன்மைகளை காண்பிக்கின்றவன், தேவ நாமத்திற்கு மகிமையை உண்டாக்குகின்றான். அங்கே, சாட்சியற்ற வாழ்க்கை வாழ்பவனின் நிமித்தமாக தேவனுடைய நாமம் மனிதர்கள் மத்தியிலே தூஷிக்கப்படும். ஞாயிறுதோறும் பிரசங்க பீடத்திலிருந்து ஊழியர் பேசும் ஜீவ வார்த்தைகளை, அன்றாடம், பேசுபவரும், கேட்பவர்களும், நடைமுறையிலே வாழ்ந்து காண்பிக்க வேண்டும். ஆலயத்திலே நாங்கள் ஒரு சில மணி நேரம் கூடுகின்றோம். மிகுதியான நேரங்களை, வீட்டிலோ, வேலையிலோ, கல்விநிலையங்களிலோ, வேறு இடங்களிலோ செலவழிக்கின்றோம். ஆலய கட்டிடத்திற்குள்ளும், வெளியிலும், நாங்கள் எதிர்நோக்கும் எல்லா சூழ்நிலைகளிலும், மற்ற மனிதர்களுடன் இயேசுவை பற்றி பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஆனால் எல்லா வேளைகளிலும், எல்லா சந்தர்ப்பங்களிலும் இயேசுவானவர் தம்மை சுகந்த வாசனையாக ஒப்புக்கொடுத்தது போல நாமும் நம்மை ஒப்புக்கொடுப்போம். “என்னைக் காணுவோர் உம்மைக் காணட்டும்” என்ற பாடலின் வரிக்கு அமைய, எங்கள் வாழ்க்கையை ஒரு பரிசுத்த பிரசங்க பீடமாக மாற்றுவோம். கிறிஸ்துவின் அன்பிலே வாழ்ந்து காட்டுவோம்.

**எபேசியர் 5:1-2**

ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, வாழ்கையிலே வரும் சவால்களை கண்டு மனந்தளர்ந்து பின்னிட்டு போகாதபடி, உம்முடைய வார்த்தையை நம்பி அதன் படி வாழ என்னை வழிநடத்திச் செல்லும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

கிறிஸ்துவின் பாடுகளின் தியானம், தீயபழக்கங்களைக் குறித்த வெறுப்பை உண்டு பண்ண வேண்டும்.

சனி | சித்திரை 13

📖 மாலை வாசகம் – ஏசாயா 40:28 –29

# சோராமல் நன்மை செய்யுங்கள்

ஆண்டுகள் கடந்து செல்லும் போது, மனிதர்கள் தேவனுடைய நன்மையை மறந்து போவது போல, நாங்கள் மற்றவர்களுக்கு செய்த நன்மைகளை மற்றவர்களும் மறந்து போகலாம்.இதனால் நன்மைகள் செய்ய வாஞ்சையுள்ள மனிதர்களும் சோர்ந்து போய்விடுகின்றார்கள். அப்படியான சோர்வுகள் எங்கள் மனதிலுள்ள, நன்மை செய்ய வேண்டும் என்னும் வாஞ்சையை தணிக்கும் போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்க்க வேண்டும். அவர்தாமே எங்கள் வாழ்க்கையில் செய்த நன்மைகளுக்கு நாங்கள் எப்போதும் நன்றியறிதலுள்ளவர்களாக இருக்கின்றோமா என்று எங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பெரும்பான்மையானோர், மற்றவர்கள் எங்களுக்கு செய்த நன்மைகளை மறந்து போய்விடுகின்றோம் என்பதை சிந்தித்து பார்ப்பதில்லை. விதைக்கப்பட்ட சிறிய விதை வளர்ந்து பெரிய விருட்சமாகி பலன் கொடுப்பது போல, மற்றவர்கள் எங்கள் வாழ்வில் மிகவும் இக்கட்டான நேரத்தில் செய்த சிறிய உதவியும் அவ்வண்ணமாகவே இருக்கின்றது. ஆனால், காலப்போக்கில், உதவியை பெற்ற சூழ்நிலையை மறந்து, பெற்ற சிறிய உதவிக்கு ஒரு விலையை வைக்கின்றார்கள். அதாவது, “அவர் என்ன பெரிய உதவியையா செய்தார்” என்று கூறிவிடுவார்கள். இனி வழி ஏதும் இல்லை என்று இருந்த நாட்களில், தேவன் என்னை படு குழியிலிருந்து தூக்கினார் என்பதை மறந்து, செழிப்பான ஆண்டுகளிலே, தங்கள் சாதனைகளையும், தங்கள் கிரியைகளையும் மேம்படுத்திப் பேசிக் கொள்வார்கள். அப்படியாக மனிதர்கள் நன்றி மறந்தாலும், கர்த்தரோ நீடிய பொறுமையுள்ளவராய், தம்முடைய தயவை மனிதர்கள் மேல் பொழிகின்றார். நம்முடைய சோர்வான நேரங்களில், கருணை நிறைந்த இயேசுவை நாங்கள் நோக்கிப் பார்க்க வேண்டும். பூமியின் கடையாந்த ரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப் படைவதுமில்லை. இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது. சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனு க்கு சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.

**கலாத்தியர் 6:9**

நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்.

**ஜெபம்**: அன்பான பிதாவே, நீர் என் வாழ்வில் செய்த உபகாரங்களை நான் ஒரு போதும் மறவாமல் இருக்கவும், மற்றவர்களுக்கு எப்போதும் நன்மை செய்வதில் குறைந்து போகாமலிருக்கவும் கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்கள் போராயுதங்கள்

இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒரு சபை ஐக்கியத்தில் இணைந்து கொண்ட மனிதன். இயேசுவின் திருப்பணிக்காக, எந்த நிந்தையையும் சகிப்பேன், என் உயிரைக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தாலும், நான் தயங்கமாட்டேன் என்று அறிக்கை செய்தான். சில ஆண்டுகள் சென்றபின், அவனுடைய பிள்ளைகளில் ஒருவரை குறித்து சக விசுவாசி ஒருவர், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் குறைவாக பேசியதால், அவன் கடும் கோபமடைந்து, சக விசுவாசியோடு வாக்குவாதம் செய்து, சபையிலே பெரும் குழப்பங்களை ஏற்படுத்தினான். அந்த வேளையிலே, அவன் தன்னுடைய இரட்சிப்பையும் விசுவாச அறிக்கையையும் மறந்து போனான். எவருடைய புத்திமதியையும் கேட்க அவனுக்கு மனதில்லாதிருந்தது. பிரியமானவர்களே, எங்களுடைய வாழ்க்கையில் யாவும் இன்பகரமாக இருக்கும் போது, இயேசுவின் நற்செய்திக்காக பல தியாகங்களை செய்ய ஆயத்தமாயிருக்கிறோம் என அறிக்கை செய்வதுண்டு. அந் நேரங்களிலே, வேறு ஒரு சக விசுவாசி ஏதோ காரணத்திற்காக குழப்பம் அடைந்தால், அந்த விசுவாசி பொறுமையாக இருக்க வேண்டும் என்று பல அறிவுரைகளை வழங்குவோம். வேதத்திலே காணும் மனிதர்களில் பாவம் செய்த மனிதர்களைக் குறித்து, ஏன் இவ்வளவு அற்பமான காரியத்திற்காக பாவம் செய்தார்கள் என்று கூறிக் கொள்வோம். ஆனால், எவரும் என்னைப் பற்றி அல்லது என் குடும்பத்தைப் பற்றி தவறாக பேசினால் (அது உண்மையான சம்பவமாக இருக்கலாம் அல்லது காரணமின்றி தவறாக பேசியிருக்கலாம்), அந்தக் கணப்பொழுதில் எங்கள் மனநிலை, நாங்கள் மற்றவர்களுக்கு கூறிய அறிவுரைகளை மறந்து, பல நியாயங்களை பேசிக் கொள்வோம். நாங்கள் இப்படியான மனநிலையோடு தொடர்ந்து வாழ முடியாது. நாங்கள் மாம்ச பிரகாரமாக போர் செய்கின்றவர்களாய் அல்லவே. தேவன் தரும் பெலத்தால், தர்க்கங்களையும், எல்லா மனமேட்டிமைகளையும், பிசாசின் சகல தந்திரங்களையும், நாங்கள் ஜெயிக்கின்றவர்களாக நாளுக்கு நாள் மாற வேண்டும்.

**2 கொரிந்தியர் 10:4**

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, தமக்கு வந்த நிந்தை அவமானம் யாவையும் தாங்கிக் கொண்ட மீட்பராகிய இயேசுவைப் போல, நானும் பொறுமையுள்ளவனாக வாழ என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என்னைத் தெரிந்து கொண்டார்

இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்லும் நேரம் வந்தபோது, கர்த்தராகிய இயேசு தாமே தம்முடைய சீஷர்களை திடப்படுத்தும்படியாக "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்" என்று கூறினார். அவர்களை மட்டுமல்ல, அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்ட எங்கள் ஒவ்வொருவரையும் இயேசு தாமே தமக்கென்று வேறு பிரித்திருக்கின்றார். ஆகவே, சவால்கள் உங்களை எதிர் நோக்கி வரும் போது தளர்ந்துவிடாதிருங்கள். கர்த்தராகிய இயேசு தாமே எங்களை தமக்கென தெரிந்து கொண்டிருந்தால், அவரை அறியாமல் யாரும் எங்களுக்கு ஏதும் செய்ய முடியாது என்ற விசுவாசத்தோடு நாங்கள் முன்னேறிச் செல்ல வேண்டும். கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் என்று இயேசுவினுடைய சீஷனாகிய பவுல் இந்த வார்த்தைகளின் வழியாக எங்களுக்கு வலுவூட்டுகின்றார். இயேசுவின் நாமத்திலே நாங்கள் பிதாவாகிய தேவனை நோக்கி கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் எங்களுக்கு கொடுக்கத்தக்கதாக, நாங்கள் போய் கனிகொடுக்கும்படிக்கும், எங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் இயேசு எங்களை ஏற்படுத்தியிருக்கின்றார். அவரே எங்கள் புகலிடமாயிருக்கின்றார். எங்களை தமக்கென தெரிந்து கொண்டு, அவருக்குள் திவ்விய கனிகளை கொடுக்கும்படியாக நம்மை ஏற்படுத்தியவர், எங்களை ஒருபோதும் கைவிட மாட்டார. உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கின்றேன் என்று வாக்களித்தவர் எங்களோடிருக்கின்றார்.

**யோவான் 15:16**

**நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்**



**ஜெபம்**: என்னை பெயர் சொல்லி அழைத்த தேவனே, பரிசுத்த வாழ்வு வாழும்படியாகவும், இயேசுவுக்குள் நற்கனிகளை கொடுக்கும்படியாகவும், என்னை ஏற்படுத்துனீர். தொடர்ந்தும் வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனால் உண்டானவைகள்

தேவன் தாமே “தம்முடைய குமாரன் (இயேசு கிறிஸ்து) அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார் எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.” என பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். எனவே நாங்கள் யாவரும் தேவனால் அவருடைய பிள்ளைகளாக அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அப்படி அழைக்கப்பட்ட பிள்ளைகள் சிலருக்கு, பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், பிரத்தியேகமான சில பொறுப்புக்களை கொடுத்திருக்கின்றார். வேறுசிலர் சபையின் செயலாளராகவும், பொருளாளராகவும் நியமிக்கப்படலாம். அப்படி நியமனங்களை பெற்றவர்கள் ஆண்டுகள் கடந்து சென்றபின், இந்த தெரிவு கர்த்தருடைய சித்தமோ அல்லது மனித திட்டமோ என்று சந்தேகம் கொள்ளாமல், அத்தகைய பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள முன்பு, தேவ சமுகத்திலே ஜெபத்திலே தரித்திருந்து, தாங்கள் ஏற்கவிருக்கும் பொறுப்பை உறுதி செய்ய வேண்டும். அப்படியாக அது தேவனுடைய ஏற்பாடு என்று உறுதி செய்து ஏற்றுக் கொண்டவர்கள், அந்த பொறுப்புக்களை முறைப்படி செய்ய எத்தனிக்கும் போது எதிர்ப்புக்களையும், பாடுகளையும் சந்திக்க நேரிடலாம். உங்கள் அழைப்பு தேவனால் உண்டாயிருந்தால், இத்தகைய சவால்களை கண்டு சோர்ந்து போகாதிருங்கள். கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.

**1 பேதுரு 3:14**

நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும், கலங்காமலும் இருந்து,

**ஜெபம்**: நீதியின் தேவனே, நீர் என்னை நம்பித் தந்த பொறுப்பை, இந்த உலகத்தினாலுண்டாகும் உபத்திரவங்களினால் தவற விட்டுவிடாதபடிக்கு, கருத்தோடு செய்து முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனை சார்ந்திருக்கும் இருதயம்

உள் ஒன்று நினைத்து வெளியே வேறொன்றை சொல்கின்றவர்களை நாம் மாயக்காரர் என்று கூறுவோம். அதாவது, "நீங்கள் செய்த உதவிக்கு நன்றி" என்று ஒரு மனிதன் வாயினாலே கூறினாலும், அவன் இருதயத்திலே அந்த உதவியைக் குறித்த நன்றி உணர்வு அற்றவனாக இருப்பானென்றால், அந்த நன்றி வெறும் முகஸ்துதியா கவே இருக்கும். சில வேளைகளிலே, மனிதர்களை இலகுவாக முக ஸ்துதியினால் ஏமாற்றிவிடலாம் ஆனால் சர்வ வல்லமையுள்ள தேவன்தாமே, இருதயத்தை ஆராய்ந்து அறிகின் றவர். மாயக்காரரே, உங்களைக்குறி த்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயி னால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண் ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ என க்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்று சில யூதமதத் தலைவர்களுக்கு இயேசு கூறினார். நாங்கள் இப்படிப் பட்ட ஆலயத்திற்கு சென்று வருகின்றோம். அங்கே இவ்வளவு ஜனங்கள் இருக்கி ன்றார்கள். நாங்கள் இந்தப் பிரிவை சேர்ந்தவர்கள். எங்களுடைய உபதேசம் இவைகளே. எங்களுடைய விசுவாச அறிக்கை இது. எங்களுடைய தரிசனம் இது. என்று மனிதர்கள் பல விதமாக தங்கள் வாழ்க்கையைக் குறித்து பேசிக் கொள்ளலாம். எவை எப்படியாக இருந்தாலும், மேற்குறிப்பிடப்பட்ட காரணிகளால் மட்டும் ஒரு மனிதனுடைய வாழ்க்கை தேவனுக்கு பிரியமாக இருக்கப் போவ தில்லை. உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவன் எங்கள் இருதயத்தின் நினைவுகளை அறிந்திருக்கின்றார். எங்கள் இருதயம் தேவனைச் சார்ந்திருந்தால், எங்கள் நினைவுகள் தேவனுடையதாக இரு க்கும், எங்கள் இருதயத்தில் அவருடைய பிரமாணங்கள் இருக்கும். அவை மனமகிழ்ச்சியாக இருக்கும். எங்கள் இருதயம் அவர் வழிகளை வாஞ்சிக்கும். எங்கள் கிரியைகள் யாவும் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கும். அவர் எங்கள் தேவனாகவும் நாங்கள் உண்மையிலே அவருடைய ஜனங்களாவும் இருப்போம்.

**எபிரெயர் 8:10**

என்னுடைய பிரமாணங் களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர் களுடைய இருதயங்க ளில் அவைகளை எழுது வேன் நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயி ருப்பார்கள்.

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, நீர் முகஸ்து தியில் பிரியப்படுகின்றவர் அல்லர். முழு இருதயத்தோடும் உம்மை சேவிக்கும்படியாய், என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கி றேன் ஆமேன்.

# பரத்திலிருந்து வரும் வல்லமை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே, தாம் இந்த பூவுலகிற்கு வந்த நோக்கத்தை நிறைவேற்றும் படி மறுபடியும் உறுதிபூண்டார். அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தத்தை, அவருடைய திட்டப்படி நிறைவேற்றும்படியாக தம்மை சம்பூரணமாய் ஒப்புக் கொடுத்தார். அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. பரலோகத்திலிருந்தவர், தம்மைத் தாழ்த்தி, மனித உரு எடுத்து, இந்த உலகிலே தோன்றி, மனித குலத்திற்கு நன்மை செய்து வந்தார். நன்மையே அன்றி தீமையை அறியாதவர். எண்ணுக்கடங்காத அதிசயங்களை செய்தவர். இப்போது அவர், அடுத்த நாளிலே, தாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்று உண்டு. மரண பரியந்தம் தாம் தாழ்த்தப்பட வேண்டிய வேளை வந்தது. அதற்காகவே இந்த பூவுலகிற்கு வந்தேன் என்று தன்னை அர்ப்பணித்தார். பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து வழியாக நம்மை தம்முடைய பிள்ளைகளாக்கிய பிதாவாகிய தேவன், எங்கள் வாழ்க்கை வழியாக தாம் மகிமை அடைய வேண்டும். நாங்கள் மனிதர்கள் மத்தியிலே பெயரும், புகழுடனும் நற்கிரியைகளை செய்கின்ற வேளைகள் உண்டு. அது மட்டுமல்ல, சில வேளைகளிலே, அவமானம் நிந்தைகளை கிறிஸ்துவின் பொருட்டு சகிக்க வேண்டிய நேரமும் எங்கள் வாழ்க்கையில் உண்டாகலாம். அந்த வேளை நம்மை நாம் தாழ்த்த வேண்டிய வேளை. நாங்கள் மற்றவர்களுக்கு கூறிய அறிவுரைகள், பிரசங்கங்கள், பக்திவிருத்திக்கான வார்த்தைகளை எங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட வேண்டிய நேரம். அந்த வேளையில் நம்பினோர் கைவிடலாம். மனிதர்கள் காரணமின்றி நகைக்கலாம். செய்த நன்மைகள் எண்ணப்படாமல் போகலாம். ஆனால் அந்த வேளையானது எங்களை அழைத்த தேவன், எங்களில் மகிமையடையும் வேளை. நாங்கள் எங்களை தாழ்த்தி, தேவனுடைய சம்பூரணமான சித்தத்திற்கு எங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். இத்தகைய அர்ப்பணிப்பு மனித பலத்திற்கு அப்பாற்பட்டது. பொறுமையோடு தேவனை நோக்கி ஜெபம் செய்யும் போது, அவர் எங்களை பெலப்படுத்துவார்.

**லூக்கா 22:43**

அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, கடினமான நேரத்திலும், உம்முடைய திருச்சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்றி முடிக்க, பரத்திலிருந்து வரும் வல்லமையை எனக்குத் தந்தருள் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தர் காட்டிய வழியில்

நாடு கடந்து சென்று பிரபல்யமான கலாசாலைகளில் உயர்கல்வியை படித்தாலும், கற்றவைகளை தங்கள் வாழ்வில் அப்பியாசப்படுத்துகின் றவர்கள் மாத்திரமே அதன் பலனை கண்டடைவார்கள். உடற்பயிற்சியை குறித்து பலவிடயங்களை அறிந்த மனிதன், உடல் நலத்தை பேணுவ தற்காக, பல விடயங்களை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்கலாம். ஆனால் அந்த மனிதன், தான் கற்பித்து கொடுப்பது போல, தன் வாழ்க்கையில் உடற்பயிற்சியை செய் யாதிருப்பானென்றால் அதனால் அவன் நன்மை பெற முடியாது. எங்கள் வாழ் வின் வழியும் சத்தியமும் ஜீவனுமான கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே, உன்னதத்திலிருந்து தன்னை தாழ்த்தி மனிதனாய் பிறந்தார். இந்த உலகத் திலே எப்படி வெற்றி வாழ்க்கை வாழ் வது என்பதை கற்றுக் கொடுத்தார், அது மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்ததை தன் வாழ்விலே செய்து காட்டினார். சொல் லிலும் செயலிலும் பிதாவுக்கு முற்றாக கீழ்ப்படிந்தார். நாங்கள் குற்றம் செய்திருந்தால், அதன் நிமித்தம் நிந்திக்கப்பட்டு, பிறர் எங்களை துன்ப படுத்தும் போதும், சில வேளைகளிலே, நாங்கள் அவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றோம். ஆனால், எந்த குற்றமும் செய்யாத கர்த்தரை பகைத்தார்கள். அவரை நிந்தித்தார்கள், அவரை துன்பப்படுத்தினார் கள். தன்னை சிலுவையிலே பலியாக ஒப்புக் கொடுக்கின்ற வேளை யிலும், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்ப டுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்று எங்களுக்கு கற்பித்து தந்த பிரகாரமாக, தன்னை துன்பப்படுத்துகின்றவர்களுக்காக பிதாவை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். கர்த்தரின் பாடுகளையும் மரணத்தையும் அதிகமாக தியானிக் கின்ற இந்த நாளிலே, அவர் செய்து காட்டிய பிரகாரம், உங்களை யாராவது எந்த காரியத்திலாவது, காரணமின்றி துன்பப்படுத்தியிரு ந்தால், அவர்களை மன்னித்துவிடுங்கள். இன்று அவர்களை ஆசீர்வ தித்து விண்ணப்பம் பண்ணுங்கள். அப்படி உங்களை துன்பப்படுத்து கின்றவர்களுக்காக ஜெபிக்க ஆரம்பிக்கும் போது, உங்கள் வாழ்வில் பெரிதும் நன்மையுமான மாற்றங்களை காண்பீர்கள்.

**மத்தேயு 5:44**

உங்களை நிந்திக்கிறவர் களுக்காகவும் உங்க ளைத் துன்பப்படுத்துகிற வர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

பரிசுத்த வாரம் - பெரிய வெள்ளி

**ஜெபம்:** அன்பான தேவனே, எங்களை நிந்தித்து துன்பப் படுத்துகி ன்றவர்களின் முன்னிலையிலும் உமக்கு சாட்சியாக, உம்முடைய திருக் குமாரன் இயேசுவைப் போல நடந்து கொள்ள எங்களை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கண்ணின் காட்சிகள்

எங்கள் நெஞ்சின் வழிகளையும், கண்ணின் காட்சிகளையும் குறித்து நாங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எங்கள் இருதயம் வாஞ்சிக்கும் வழிகளை யாரும் அறியமுடியாது என மனிதர்கள் நினைக்கின்றார்கள். அது ஒரு அளவிற்கு உண்மையாக இருக்கலாம். ஆனால், காலப்போக்கில் எங்கள் இருதயத்தின் வாஞ்சையானது, படிப்படியாக கண்ணின் காட்சியாக மாறிவிடுகின்றது. அதாவது இருதயம் வாஞ்சிப்பதை கண்களும் வாஞ்சிக்கும். எனவே எங்கள் இருதயத்தின் தியானங்கள் கர்த்தருக்கு முன் தூய்மையாக மாற வேண்டும். நெறிகெட்ட காட்சிகளை பார்ப்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இன்று நாகரீகம் என்ற போர்வையிலே, உலகத்திலே நடக்கும் முறைகேடுகள், ஒளிப்பதிவு செய்யப்பட்டு, இன்ரநெற் ஊடகங்கள், தொலைக் காட்சிகள், மற்றும் திரைப்படங்கள் வழியாக மனிதர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது. இப்படிப்பட்ட நெறிகெட்ட காட்சிகள், நீங்கள் அறியாதிருக்கின்ற பாவ பழக்கங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தும். ஏதேனிலே, எப்படியாக பிசாசானவன் ஏவாளின் பார்வையை மாற்றினானோ, அதே பிரகாரமாக, நீங்கள் பாவம் செய்வதை அல்லது மற்றவர்களை பாவத்திற்குள் விழுத்தும் காரியங்களை தூண்டிவிட்டு, அதை நாகரீகம் என்று மாற்றிவிடுவான். எல்லா காட்சிகளையும் உங்கள் கண்முன் கொண்டுவராதிருங்கள். நெறிமுறையற்ற வாழ்க்கை, அவலட்சணமான ஆடைகள், தாய் தந்தையருக்கு கீழ்ப்படியாமல் வாலிபர்கள், கன்னிகைகளோடு செய்யும் பாவங்களை திரும்பத் திரும்ப திரைப்படங்கள், நாடகங்கள், நகைச்சுவைக் காட்சிகள் ஊடகங்கள், மற்றும் திரைகளின் வழியாக பார்ப்பதினால், உங்கள் சுத்த மனசாட்சி உணர்வற்றதாக மாறிவிடும். எனவே நீங்கள் அறியாத பாவ காரியங்கள், பாவத்தை தூண்டும் காரணிகளை உங்கள் பார்வைக்குட்படுத்தாதிருங்கள். கண்ணானது சரீரத்தின் விளக்காக இருக்கின்றது. எனவே நெறிமுறையற்ற கண்ணின் காட்சிகள் அந்த விளக்கை இருளடையச் செய்து, இருதயத்தின் தியானங்களை தேவனுக்கு எதிரான மனித எண்ணங்களாக மாற்றிப் போடும். எனவே உங்கள் கண் இருளடையாதபடிக்கு எச்சரிக் கையாக இருங்கள்.

**லூக்கா 11:35**

**ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, பரிசுத்த வாழ்வு வாழும்படியாய் என்னை வேறுபிரித்தீர். என் கண்ணின் காட்சிகள் உமக்குகந்ததாக இருக்கும்படி உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் சாயல்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே, மரணத்தை வென்று உயிர்தெழுந்த நாளை, இன்று நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றோம். ஏதேனிலே மனித குலத்தின் முதல் பெற்றோராகிய ஆதாம் ஏவாள் வழியாக வந்த நித்திய மரணத்தின் ஆக்கினையை அகற்றி, அவர் வழியாக பரலோகம் சென்றடையும் புதிதும் ஜீவனுமான ஒரே வழியை உண்டு பண்ணினார். நாமும் கிறிஸ்துவின் மரணமதின் சாயலில் இணையும் போது, நாங்கள் உயிர்த்தெழுதலின் நாளிலே, நித்திய மகிமையின் சரீரத்தை அணிந்தவர்களாய் கிறிஸ்துவுக்குள் உயிர்தெழுவோம். அவருடைய மரணத்தின் சாயலில் இணைந்து கொள்ளும்படியாக, எங்கள் பழைய மனுஷக்குரிய மாம்ச கிரியைகளை சிலுவையிலே அறையவேண்டும். கர்த்தராகிய இயேசுவே பாவத்தை நீக்கும் பரிகாரி என்று ஏற்றுக் கொண்டு, ஞானஸ்நானத்தின் வழியாக, எங்கள் பழைய மனுஷனை கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணியிருக்கின்றோம். எப்படியாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, நன்மை செய்கின்றவராயும், நன்மையே அன்றி தீமையை அறியாத வரும், குற்றமற்றவராகவும், பரிசுத்தராகவும் இருந்தபோதும், தமக்கு வந்த பாடுகளை பொறுமையோடு ஏற்றுக் கொண்டார். நெருக்கப்படுகின்ற வேளையிலும் நன்மை செய்தார். அதுபோலவே, கர்த்தராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் முன் இருந்த வாழ்க்கையை நாங்கள் விட்டு, இப்போது புதிதும் ஜீவனுமான வழியில் நடக்கும்படி ஞானஸ்நானத்தின் வழியாக அந்த மார்க்கத்திற்குள் நுழைந்திருக்கின்றோம். இப்போது, அவருடைய இரண்டாம் வருகைக்காக காத்திருக்கின்றோம். எங்களுக்கு முன் ஓடி வெற்றி வாழ்க்கை வாழ்ந்தவர்கள், இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றிருக்கின்றார்கள் (கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள்). இன்று கர்த்தருடைய வருகை வருமாக இருந்தால், கர்த்தர் மறுபடியும் வரும்போது, அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் அவர்களோடேகூட எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். எனவே, கிறிஸ்துவின் சாயலில் இணைந்து, வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வோம்

**ரோமர் 6:5**

ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, உம்முடைய உயிர்தெழுதலின் சாயலில் இணையும்படியாய், வேறுபிரிக்கப்பட்ட பரிசுத்த வாழ்வு வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரித்தெடுக்கப்பட்டவர்கள்

“புகைத்தல், மதுபானம் அருந்துதல், நெறிகெட்ட காட்சிகளை பார்த்தல் (தொலைகாட்சி, இன்ரநெற் ஊடகங்கள், திரைப்படம்), விக்கரக ஆராதனை, போன்ற தீங்கான காரியங்களை நாங்கள் செய்வதில்லை, ஏனெனில் நாங்கள் தேவனால் வேறுபிரிக்கப்பட்டவர்கள்” என்று சிலர் கூறிக் கொள்வார்கள். இவை மிகவும் பாராட்டப்படத்தக்கது. ஆனால், இத்தகைய பழக்கவழக்கங்களிலிருந்து எங்களை தவிர்த்துக் கொள்வதுடன் வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கை முற்றுப் பெறுவதில்லை. மாம்சத்தின் கிரியைகளாகிய விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள் ஒன்றும் வேறுபிரிந்த வாழ்க்கை வாழும் மனிதனின் வாழ்வில் இருக்கக் கூடாது. (கலாத்தியர் 5:20-21). இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று தேவ ஊழியராகிய பவுல் அறிவுரை கூறியிருக்கின்றார். இவற்றுள் அநேக காரியங்கள் கூறப்பட்டிருக்கின்றது, அவற்றுள் சிலவற்றை எடுத்து ஆராய்ந்து பாருங்கள். விசுவாச குடும்பங்கள் யாவும் ஒருமனப்பட்டிருக்கின்றார்களா? அல்லது இன்னும் பகை, விரோதங்கள், சண்டைகள், பிரிவினைகள் சிலருடன் தொடருகின்றதா? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலை மதிக்கமுடியாத பரிசுத்த இரத்தத்தினால் நாங்கள் மீட்கப்பட்டோம். அப்படியாக அவருடைய மீட்பைப் பெற்றவர்கள் யாவரும் பரிசுத்தமாக்கப்பட்டோம். ஆவியினாலும் ஜலத்தினாலும் மறுபடி பிறந்திருக்கின்றோம், வேறு பிரிக்கப்பட்டோம். இவை யாவும் உண்மை! ஆகையால் நாங்கள் அந்த மீட்பின் பலனாகிய நற்கிரியைகளை (ஆவியின் நற்கனிகளை) எங்கள் வாழ்க்கையில் நாங்கள் காண்பிக்க வேண்டும். பரிசுத்த வாழ்வு வாழும்படி அருமையான அழைப்பைப் பெற்ற நாங்கள், மாம்சத்தின் கிரியைகளுக்கு எங்களை மறுபடியும் ஒப்புக் கொடுத்து இருதயத்தை கடினப்படுத்தாமல் பரிசுத்த வாழ்வு வாழ்வோம்.

**எபிரெயர் 10:10**

இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலேஇ அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்

**ஜெபம்:** பரலோக தேவனே, உம்முடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்குட்பட்டவர்களாகும்படியாய் நீர் இந்த உன்னத அழைப்பை தந்தீர். பரிசுத்த வாழ்வு வாழும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனமகிழ்ச்சியோடு பணி செய்வோம்

சிறு பிராயத்திலே பிள்ளைகள், தங்களை எப்போதும் தங்கள் சகோத ரரோடு ஒப்பிட்டு முறையிடுவதுண்டு. “அது எப்படி நீங்கள் அண்ண ணுக்கு அப்படி செய்ய முடியும், எனக்கு நீங்கள் அப்படி செய்யவி ல்லையே?” அல்லது ஒரு வேலையை செய்யும்படி கூறும் போது, “ஏன் என்னிடம் மாத்திரம் கேட்கின்றீர் கள், என்னுடைய தங்கச்சியை கேட் டால் என்ன” இப்படியாக பிள்ளைகளு டைய முறையீடு அதிகமாக இருக்கும். தேவன் தம்முடைய ஊழியத்தை செய்யும்படி எவரையும் நிர்ப்பந்திப்பதி ல்லை. அவர் அழைக்கும் போது, அவர் சத்தத்திற்கு கீழ்ப்படியும் போது, தம்முடைய தாசர்கள் செய்ய வேண் டிய காரியங்களை போதிக்கின்றார். தாம் நேசிப்பவர்களுடன் உரிமை கொண்டாடுகின்றார். தேவ ஊழி யராகிய பவுல், தேவ ஊழியத்தின் பாதையிலே அநேக உபத்திர வங்களை சந்தித்தார். எனினும், தன்னை ஆட்கொண்ட இயேசுவை அதிகம் நேசித்தார். அவருக்காக எதையும் செய்ய ஆயத்தமாக இரு ந்தார். ஒரு சமயம் பவுல் என்பவர், நற்செய்தியின் நிமித்தம் காவலில் இருந்தபோது, அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள் நீ என்னைக்குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார். பவுல் என்பவருக்கு எல்லாவற்றையும் தன் சொந்த பெலத்தினால் செய்து முடிக்க முடியாது என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆனால், அவர் இயேசுவுக்காக எதையும் செய்ய ஆயத்தமுள்ள இருதயத் தோடு இருந்ததினால், கர்த்தராகிய இயேசு தம்முடைய கிருபை வழி யாக பெலப்படுத்தினார். ஏன், பேதுரு அப்படி செய்ய முடியாது? ஏன் மற்ற சீஷர்கள் அப்படி செய்யமுடியாது என பவுல் கேள்வி கேட்க வில்லை. ஏனெனில், பவுல் தானே, தன்னை அழைத்தவரையும், தன் னுடைய அழைப்பையும் நன்கு உறுதியாக அறிந்திருந்தார். எங்களு டைய குடும்ப, சபை, சமுதாய வாழ்க்கையில் எங்கள் குழந்தைத்த னமான பேச்சுக்களை விட்டுவிட்டு, எங்களை அழைத்தவர் இயேசு என்பதை உணர்ந்து, எங்களின் அழைப்பை உறுதிசெய்து கொண்டு, மனவிருப்பத்தோடு எமது பொறுப்புக்களை நிறைவேற்றுவோம்.

**1 கொரிந்தியர் 13:11**

நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.

**ஜெபம்**: அழைத்த தேவனே, குழந்தைத்தனமாக, என்னை இன்னுமொருவருடன் ஒப்பிட்டு, முறுமுறுப்போடு வாழாமல், நீர் தந்த பொறுப்புக்களை, மனவிருப்பத்தோடு நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# பழிவாங்குதல் தேவனுக்குரியது

நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்கிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசு கூறினார். இன்றைய நாளிலே, பல தேவ பிள்ளைகள், தேவனுடைய கிருபையின் நற்செய்தியை அறிவித்து வருகின்றார்கள். அதை பலர் அசட்டை செய்தும் விடுகின்றார்கள். சிலர் ஏற்றுக் கொள்கின்றார்கள். சிலர் அதை ஏற்றுக் கொண்டாலும், அதை மறுதலித்து பின்னிட்டு திரும்பி விடுகின்றார்கள். நாங்கள் இன்று நிர்மூலமாகாதபடிக்கு, தேவனுடைய அளவற்ற கிருபை எங்களுக்கு அருளப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த பூமியில் குறிக்கப்பட்ட நாட்கள் நிறைவேறும் போது, நியாயத்தீர்ப்பின் நாளிலே, நாம் ஜீவனுள்ள தேவனுடைய கைகளிலே விழுகிறது பயங்கரமாயிருக்குமே. சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், நாங்கள் தேவனுடைய கிருபையின் நாட்களை அசட்டை பண்ணுகின்றவர்களாயிருப்போம். அப்படி செய்து மனப்பூர்வமாய் பாவம் செய்கின்றவர்களுக்கு, பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் பெரிய கொடிதான ஆக்கினைக்கு பாத்திரவானாக இருப்பான் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. (எபிரெயர் 10:26-31). நற்செய்தியை அறிவித்தல், தொலைந்து போன ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தல், வேதம் கூறும் எச்சரிப்பை தயவாய் அறிவித்தல், அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக ஜெபித்தல் ஆகிய இவைகளே எங்களின் பொறுப்பு. எங்களை அசட்டை செய்கின்றவர்களை பழி வாங்குதல் எங்களை அனுப்பியவரின் பொறுப்பு. எனவே நாங்கள் பெற்ற ஊழியத்தை பொறுமையுடன் நிறைவேற்றுவோம்.

**எபிரெயர் 10:30**

பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பாரென்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம்.

**ஜெபம்:** சர்வவல்லமையுள்ள தேவனே, உம்முடைய நாள் வருமட்டுமாய், மற்றவர்களை நியாயந்தீர்க்காமல், நான் பெற்ற பணியை பொறுமையோடு செய்து முடிக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விடுதலை உண்டு

அடிமைத்தன கட்டுக்களில் இருந்து விடுதலையடைய முடியாமல், மன திலே போராடிக்கொண்டிருப்பவர்கள் அறிய வேண்டியது என்னவென் றால். எங்களுக்கு வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் பெரிதான போராட்டம் உண்டு. பொல்லாத ஆவிக்கு உட்பட்டிருக்கும் உலக வழிமுறைகளினால் பொல்லாத ஆவிகளின் சேனைகளை ஜெயிக்க, மேற்கொள்ள முடியாது. எங்கள் சுயபெலத்தால், சொந்த புத்தியால், உலகம் தரும் படி முறைகளினால் பிசாசின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கும் அடிமைத்தன பாவ பழக்கங்களை மேற்கொள்ள முடியாது. அப்படி செய்வது ஒரு தற்காலிகமான மாயையான தீர்வைத் தரும். ஒரு பாத் திரம் சேற்றினால் நிறைந்திருக்கும்போது, அந்த சேற்றை பல வழிக ளிலே அகற்றலாம். ஆனால், அந்த பாத்திரம் மறுபடியும் சேற்றினால் அசுத்தப்படாதபடிக்கு, அதை பாதுகாக்க வேண்டும். மனிதனுடைய இருதயம் எங்கேயோ அங்கே அவனுடைய எண்ணங்களும், கிரியை களும், வாஞ்சைகளும் இருக்கும். எனவே, இருதயத்தைப் தேவ நன் மையினால் நிறைக்கும் போது, பாவ பழக்கங்களுக்கு அங்கே இடம் அற்றுப் போய்விடும். எனவே, எங்கள் இருதயத்தை தேவனுடைய திருவசனத்தினால் நிறைக்க வேண்டும். வேதத்தை வாசியுங்கள், அதிக திகமாக வாசியுங்கள், ஜெபம் செய்யுங்கள். நீங்கள் இப்படியாக செய்ய ஆரம்பிக்கும் போது, தேவ வழிநடத்துதலை உணர ஆரம்பி ப்பீர்கள். நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆவியானவர் எங்களுகு உணர்த்துவார். தினமும் வேதம் வாசிக்கும் பழக்கம் இல் லாவிட்டால், லூக்காவின் நற்செய்தி புத்தகத்தை வாசிக்க ஆரம்பி யுங்கள். அப்போஸ்தல நடபடிகளை வாசியுங்கள், நீதிமொழிகள், சங் கீதம் போன்ற புத்தகங்களை வாசியுங்கள். ஜெபித்து பழக்கமில்லாதிரு ந்தால், அறைக்குள் சென்று முழங்காலில் நின்று, உங்கள் நிலையை தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். வேத வசனங்களை அறிக்கையி ட்டு ஜெபியுங்கள். வாக்களிக்கப்பட்ட சத்திய ஆவியானவர் சகல சத் தியத்திலும் உங்களை வழிநடத்திச் செல்வார். வேத வாக்கியங்கள் எங்கள் வாழ்வை சீர்ப்படுத்துவதற்கு வல்லமையுள்ள தாக இருக்கின் றது. எனவே வேதத்தை வாசித்து, ஜெபிக்க ஆரம்பியுங்கள்.

**2 தீமோத்தேயு 3:16**

**வேதவாக்கியங்களெல் லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, எங்களுடைய போராயுதங்கள் மாசத்திற் குரிய பெலன் அல்ல, அதை உணர்ந்து உம்முடைய வார்த்தை வழியாக பெலப்படும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மன்னிப்பின் மகிமை

ஒரு மனிதன், அயலில் வாழ்ந்து வந்த ஒரு விசுவாசக் குடும்பம் ஒன்றின் இக்கட்டான சூழ்நிலைகளில், தன்னலம் கருதாது, பல உதவிகளை செய்து வந்தான். ஆனால், சில ஆண்டுகள் கடந்து சென்ற பின், அந்த குடும்பத்தினர் அந்த மனிதனுக்கு எதிராக தீமையான காரியம் ஒன்றை செய்துவிட்டார்கள். அதனால் அந்த மனிதன் மனம் மிகவும் புண்பட்டது. இந்த நிலையை எப்படி அணுகுவது என்பதைக் குறித்து பல விதமான மாம்ச சிந்தைகள் அவன் மனிதில் தோன்றிற்று. எனினும் "யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயுமிருக்கக் கடவர்கள்" என்னும் வேத வார்த்தை அவனுடைய கோபத்தின் உக்கிரத்தை அடக்கியது. உக்கிர கோபமானது மனிதன் நிதானமாக சிந்தித்து செயலாற்றும் ஆற்றலை தடை செய்யும். எனவே பொறுமையாக தன்னுடைய நிலையை தேவனுடைய சமுகத்திலே ஆராய்ந்து பார்த்தான். கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பார்த்தான். "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" என்னும் வார்த்தை அவன் மனதை தெளியப் பண்ணிற்று. ஆம் பிரியமானவர்களே, பதறின காரியம் சிதறிப் போகும். எனவே கோபத்தில் செயலாற்றுவதை நிறுத்தி விடுங்கள். தன்னை துன்புறுத்துகின்றவர்களின் அக்கிரமங்களையும், தன்மேல் சுமந்து கொண்ட இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவர் எங்களுக்கு அளித்த மன்னிப்பின் மாட்சிமையை சற்று எண்ணிப்பாருங்கள். மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். இப்போதும், அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். எங்களுக்கு எதிராக தீமை செய்கின்றவர்களை நாங்கள் மன்னிக்கும்போது, எங்கள் பிதாவாகிய தேவனுக்கு பிரியமுள்ள பிள்ளைகளாக இருப்போம்.

**நீதிமொழிகள் 19:11**

மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும். குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை.

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, உம்முடைய திருக் குமாரானாகிய இயேசுவைப் போல, நானும் எனக்கெதிராக குற்றம் செய்கின்றவர்களை மன்னித்து வாழ என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இனி வரும் கன மகிமை

நாங்கள் இம்மைக்கேற்ற இன்பங்களுக்காக தேவனைத் தேடுகின்றவர்கள் அல்லர். இந்த பூமிக்குரிய காரியங்கள் தற்காலிகமானதும், அழிந்து போகின்றதுமாயிருக்கின்றது. தேவனுக்காக பல தியாகங்களை செய்து பாடு அனுபவிப்பவர்களைப் பார்த்து, "பல ஆண்டுகள் நீங்கள் இவ்வளவாக பிரயாசப்பட்டும், இந்த உலகத்திலே என்னத்தை கண்டீர்கள்" என்று சிலர் இப்படியாக கூறிக் கொள்வார்கள். இவ்வண்ணமாய் கூறுகின்றவர்கள், தேவனுடைய ஆளுகையைக் குறித்த அறிவு அற்றவர்கள். இந்தப் பூமிக்குரிய ஆண்டுகள் முடிந்து போனாலும், தேவனுடைய ஆளுகை முடிந்து போவதில்லை. இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் என வேதத்திலே வாசிக்கின்றோம். இந்த உலகம் தரும் இன்பங்களே தேவ ஆசீர்வாதம் என, சுக போகங்களிலே மூழ்கி பலர் விசுவாசக் கண்கள் சொருகிப் போனவர்களாக வாழ்கின்றார்கள். அவர்கள் தாங்களும் தேவனுடைய வழிகளிலே நடப்பதில்லை, அதே நேரத்தில் தேவனுடைய வழிகளிலே பிரயாசப்படுகின்றவர்களையும் பார்த்து நகைத்துக் கொள்வார்கள். இந்த உலகத்திலே நாங்கள் அடைந்திருக்கும் ஐசுவரியம் அல்லது செல்வ செழிப்பு எங்கள் ஆவிக்குரிய நிலையின் அளவு கோல் அல்ல. ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம். எனவே இனிவரவிருக்கும் ஈடு இணையில்லாத மகிமையை நோக்கிப் பார்ப்போம். இந்த உலகத்தாரின் அறியாமையினால் உண்டாகும் பேச்சுக்களினால் சோர்ந்து போகாதிருப்போம்.

**எபிரெயர் 10:39**

நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.

**ஜெபம்**: அழைத்த தேவனே, இனி வரவிருக்கும் ஈடு இணையில்லாத மகிமையை எங்கள் விசுவாசக் கண்களால் காணும்படிக்கு எங்கள் மனக் கண்களை திறந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கி றேன் ஆமேன்.

# சபை கூடிவருதலின் அவசியம்

எபிரெயர் 10:25

சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்

எங்களுடைய நாளாந்த வாழ்க்கையிலே நாங்கள் எதிர்பாரத நிகழ்வுகள் நடைபெறுவதுண்டு. இந்த உலகத்திலே தீமை மலிந்திருப்பதினால், நாங்கள் எதிர்நோக்கும் எதிர்பாராத நிகழ்வுகளில் பல எங்கள் வாழ்க்கைக்கு சவாலாகவே இருக்கின்றது. அவற்றுள் சிலவற்றினால், நாங்கள் சபை கூடுதலில் கலந்து கொள்ளமுடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றறோம். நோய், விபத்து, தவிர்க்கமுடியாத தூரப்பிரயாணம், உயிரிழப்பு, யுத்தம் போன்ற நிகழ்வுகள் ஏற்படுவதனால், சபை கூடிவருதலில் கலந்து கொள்ள முடியாமல போகலாம். சிலர் வைத்திய சாலைகளிலும், முதியோர் பராமரிப்பு நிலையங்களிலும், சிறைச் சாலையிலும் இருப்பதால், அவ்விடங்களிலே நடக்கும் ஆராதனைகளில் கூட கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்படலாம். இவை யாவும் எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள். ஆனால் ஆராதனைக்கு செல்லாமல் இருப்பதற்கு சாட்டுப் போக்குகளை தேடும் மனிதர்களைப் போல நாங்கள் வாழக் கூடாது. இப்படிப்பட்டவர்கள், தேவன் இருதயத்தை ஆராய்ந்து பார்க்கின்றார் என்பதைக் கூட உணரமுடியாமல், தங்கள் குடும்பத்தினரையும், போதகர் மற்றும் விசுவாசிகளை திருப்திப்படுத்தும் முகமாக பல சாட்டுப் போக்குகளை சொல்லுவார்கள். தாவீதின் நாட்களிலே, தேவனுக்குரிய ஆராதனை எருசலேமிலே நடந்து வந்தது. அப்போது, அந்த நாட்டின் ராஜாவாயிருந்த சவுல், தாவீதை கொன்றுபோடும்படி சதித்திட்டம் போட்டிருந்ததினால், தாவீதுக்கோ எருசலேமுக்கு செல்ல முடியாமற் போய்விட்டது. இதனால் அவர் இருதயம் வலுவாக வேதனைப்பட்டது. தேவ சமுகத்திற்கு எப்போது செல்வேன் என அவர் தாகமாகயிருந்தார். பிரிய மானவர்களே, எங்கள் இருதயமும் அப்படியாக தேவ சமுகத்தை நாடித் தேட வேண்டும். பெந்தேகோஸ்தே நாளென்று, சுமார் 120 பேர் ஒருமனப்பட்டு கூடி வந்தார்கள், அங்கே தேவ ஜனங்கள் ஒருமித்து கூடிவந்த போது, அங்கே தேவன் பெரிய காரியங்களை நடப்பித்தார். அதுபோல நாங்களும் ஒருமித்து கூடுகின்ற இடத்திலே தேவன் பெரிய காரியங்களை நடப்பிப்பார்.

**ஜெபம்**: பரலோக பிதாவே, நீர் எங்களுக்கு அருளின கூட்டுறவு ஐக்கியத்தை நாங்கள் அசட்டை செய்யாதபடிக்கு, ஆர்வத்தோடு ஒருமித்து உம்மைத் துதிக்க என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் பிரமாணம்

"உங்களை சில கிழமைகளாக சபையில் காணவில்லை, நான் உங்களுக்காக தேவனிடத்திலே விண்ணப்பம் செய்தேன்" என்று ஒரு தாயார், இன்னுமொரு சபை விசுவாசியிடம் கூறினார். ஆம்! சபையிலே, விசுவாசிகளுடைய நலன் கருதி கரிசனையுடன் ஜெபம் செய்கின்றவர்கள் இருக்கின்றார்கள். உண்மையான அன்புள்ள இருதயத்தோடு சபையிலுள்ள விசுவாசிகளுக்காக பரிந்து பேசி ஜெபிக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். சில வேளைகளிலே, ஒரு குடும்பம் யாரும் அறியாத, அறியக்கூடாத, வெளியே சொல்ல முடியாத பிரச்சனைகள் வழியாக கடந்து செல்லும் போது, அவர்கள் நிலையை, ஆவியிலே நிதானித்தறிந்து, யாருக்கும் எதையும் கூறாமல், தேவனிடம் அந்த குடும்பத்திற்காக ஜெபம் செய்கின்றவர்கள் இருக்கின்றார்கள். இத்தகைய நிகழ்வுகள், சபை ஐக்கியத்தின் நன்மைகளில் ஒன்று. ஆதியிலிருந்து, பிசாசானவன், மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் பிரிவினையை உண்டாக்குவதையே நோக்கமாக கொண்டிருக்கின்றான். அது மட்டுமல்லாமல், மனிதன் இன்னுமொரு மனிதனுடன் ஐக்கியமாயிருப்பதை பிசாசானவன் விரும்புவதில்லை. ஏனெனில், தூய்மையான உறவிலே பல நன்மைகள் உண்டு, பிசாசானவன் நன்மையை வெறுக்கின்றான். சபையின் ஆரம்ப நாட்களிலிருந்து இன்றுவரை சில மனிதர்கள், ராஜ்யங்கள், அரசாங்கங்கள், கூடி ஆராதிப்பதை தடை செய்து வருகின்றார்கள். ஏனெனில் ஒன்றித்து கூடியிருப்பதின் பெலத்தை அவர்கள் விரும்புவதில்லை. சபை வழியாக கிறிஸ்துவின் பிரமாணம் நிறைவேற்றப் பட்டு வருகின்றது. பெலவீனர் தாங்கப்படுகின்றார்கள், ஜனங்கள் சீர்பொருந்துகின்றார்கள், தேவ வழியில் நடக்க போதிக்கப்படுகின்றார்கள், பல ஆதரவுகளை பெறுகின்றார்கள், கவலையில் தேற்றப்படுகின்றார்கள், பிழைகளை எவை என கண்டு கொள்கின்றார்கள், பிள்ளைகள் தேவ பயத்தில் வளர போதிக்கப்படுகின்றார்கள் இப்படியாக அநேக ஞான நன்மைகள் சபை வழியாக சபையோருக்கு ஈவாக கொடுக்கப்படுகின்றது. இவைகள் வேண்டாம் என்று கூறி, தனித்து வாழ தீர்மானம் செய்யாதிருங்கள். நீங்கள் பிரிந்திருக்கும் போது, பிசாசானவன் உங்களை இலகுவாக வழி விலகப் பண்ணுவான்.

**கலாத்தியர் 6:2**

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, நாங்கள் பரலோகம் செல்லும்படியாக ஒரு மனதுடன், ஒன்றாய் கூடி, தூய உறவுடன் உம்மை சேவித்து, கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்ற என்னை வழிநடத்து வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

gtachurch

செவ்வாய் | சித்திரை 30 | 📖 மாலை வாசகம் –1 கொரி 12:14 –27

# ஒரே சரீரம்

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்" (லூக்கா 6:27), "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோமர் 12:21). உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக. (மத்தேயு22:39). இத்தகைய கொள்கைகள் கிறிஸ்தவத்தின் அடித்தளமாக இருக்கின்றது. இத்தகைய கொள்கைகளை நீங்கள் எங்கே கடைப்பிடிக்க வேண்டும்? குடும்பத்திலா? வேலை செய்யும் இடத்திலா? கல்வி நிலையங்களிலா? கடைத் தெருக்களிலா? நண்பர்கள் உறவினர் மத்தியிலா? சமுதாயத்திலா? மேற்கூறப்பட்ட கொள்கைகள் எல்லா இடங்களிலும் கிறிஸ்தவனின் வாழ்க்கையில் மனதார கடைப்பிடிக்க வேண்டியவைகள். அப்படியானால், இந்த கொள்கைகள் நாங்கள் கூடி வரும் சபையில் கைக்கொள்ள வேண்டியதில்லையா? சபையிலுள்ளவர்களை உடன் சகோதரர், சக விசுவாசி, கிறிஸ்துவுள்குள் ஒரே வீட்டார் என்று பல அருமையான வார்த்தைகளால் வர்ணிக்கின்றோம். சத்துருக்களை சிநேகிக்க ஆயத்தம் என்றால், உங்கள் உடன் சகோதரன் உங்களை அறிந்தோ அறியாமலோ எதிர்த்து நின்றால் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? நாங்கள் இன்னும் அதிகமாக அவர்களை சிநேகிக்க வேண்டுமல்லவா! இன்னும் அதிகமாக அவர்களை மன்னிக்க வேண்டும் அல்லவா! ஆம் பிரியமானவர்களே, சபையிலும், பிசாசானவன் சில களைகளை விதைத்திருக்கலாம். அங்கேயும் சில முரண்பாடுகள் தோன்றலாம். எனவே, கிறிஸ்துவின் அன்பை, மனதுருக்கத்தை, மன்னிப்பை, தாழ்மையை, சாந்தத்தை இன்னும் அதிகம் கூட்டி வழங்க வேண்டும். நாங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கின்றோம். ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே அவரின் நோக்கம். எங்கள் குறைகளிலே தேவன் எங்கள் மேல் நீடியபொறுமையுள்ளவராக இருப்பது போல, மற்றவர்களுடைய பெலவீன நேரங்களிலும், அவர் மற்றவர்கள் மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். நாங்கள் அவரின் சரீரத்தின் அவயவமாக இருப்பதால், நாங்களும் மற்றவர்கள் மேல் நீடிய பொறுமையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**ரோமர் 12:5**

அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.

**ஜெபம்**: மனமிரங்கும் தேவனே, எங்களுக்கு தீமை செய்கின்றவர்கள் மேல் நாங்கள் நீடிய பொறுமையுள்ளவர்களாக இருந்து, இயேசுவைப் போல நாளுக்கு நாள் மாற்றமடையும்படி கிருபை செய்யும்.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**“உள்ளான மனிதன்”** மாதாந்த சஞ்சிகையை வெளியீட்டை ஆரம் பித்து, **ஐந்து (5) வருடங்களை**, பூர்த்தி செய்திருக்கின்றோம். இது தேவனுடைய ஈவு!

இந்த சஞ்சிகையிலே தரப்பட்டுள்ள, புதிய நாளுக்குள் அனுதின தியானக் குறிப்புக்கள், **ஒலிப்பதிவு செய்யப்பட்டு**, எங்கள் இணைத் தளத்தில் பதிவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு அறி யத் தருகின்றோம். தியானக் குறிப்புக்களின் **ஒலிப்பதிவை கேட்ப தற்கு,** எங்கள் இணையத்தளத்தில், உள்ளான மனிதன், தியானப் பக்கத்தை ( INNER MAN, DAILY DEVOTION) தெரிவு செய்யுங்கள்.

உள்ளான மனிதன் சஞ்சிகை **இலங்கையிலும்** புத்தக வடிவிலே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், **அமெரி க்கா, ஐரோப்பியா, அவுஸ்ரேலியா** கண்டங்களிலுள்ள நாடுகளி லும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. உங்கள் உறவினர் நண்ப ர்கள் அதை பெற்றுக் கொள்ள விரும்பினால், அவர்களின் முகவ ரியை மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடா கவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது இந்தப் புத்தகத் தின் கடைசிப் பக்கத்திலுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விப ரங்களை பதிவுசெய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங் கள்.

சகலமும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனின் ஜீவ வார்த் தைகளை அனுதினமும் வாசித்து தியானியுங்கள். தேவனை அறி கின்ற அறிவிலே வளருங்கள்! உங்களைக் குறித்ததான பிதாவா கிய தேவனின் சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றுங்கள்! நித்திய இன்ப வாழ்வை பரலோகில் பெற்றுக் கொள்ளுங்கள்.

**தேவன்,தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித் -திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ் வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

முகவரி ADDRESS:

நகரம் CITY:

தபால் குறியீடு POSTAL CODE:

மாநிலம் PROVINCE:

தொலைபேசி TELEPHONE:

மின் அஞ்சல் E-MAIL:

விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, ON M1V 5J9
www.gtachurchnet.ca ☎ 416.613.2909